முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 3 | 6—4—56 | வெள்ளி | ஒலி 1

சென்னை ராஜ்யத்துக்கு தமிழ்நாடு என்ற பெயர் கூடாது என்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய தமிழ்த் துரோகிகளுக்கு -- இன்றில்லாவிட்டால் நாளை -- நாளை தவறினால் அதற்கு மறுநாள் -- மக்கள் அளிக்கும் தீர்ப்பு பயங்கரமாகத்தான் இருக்கும்!

சமர் தொடுக்கும் முன்

ஐந்தாண்டுத் திட்டங்கள் — நாட்டின் வறுமைப் பிணியை ஓட்டுவதற்கு! வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு!

—நாடெங்கிலும் இந்தப் பிரச்சாரம் பிரதமரின் வாய் மூலம், பத்திரிகை மூலம், செய்திப் படங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டன!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினால் மோசம் செய்யப்பட்ட தென்னகம் இரண்டாவது திட்டம் உருவாகிக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலும்எதிர்பார்த்தது,சமநீதி கிடைக்கும், செழிப்பும், செல்வமும் பொங்கி வழியும்—என்று!

ஆனால் வயிற்றில் அடித்துவிட்டார்கள், தென்னகத்தைக் குனிய வைத்து, கூன் முதுகாக்க நினைவு கொண்டிருக்கும் குள்ள மதியினர்!

புதிதாக வகுக்கப் பட்டிருக்கும் பிராந்திய அமைப்புகளின்படி,

வடக்குப் பிராந்தியத்திற்கு 350 எஞ்சினீயரிங் பட்டதாரிகள்!

கிழக்குப்பிராந்தியத்திற்கு 2800 பட்டதாரிகள்!

மேற்குப்பிராந்தியத்திற்கு 500 பட்டதாரிகள்!

—என்கிற விதத்திலே பொறி இயல் வல்லுனர்கள் தேவைப் படுவதாக அறிவித்திருக்கிறார்கள்!

ஆனால் இதைத் தொடர்ந்த இன்னொரு செய்தி நம் இதயத்தைப் புண்ணுக்குகிறது!

ஆமாம்; தென் மண்டலத்திற்குத் தேவையான பொறி இயல் வல்லுனர்கள் 150 பேர்கள்தானும்!

அதுவும் இந்தத் தேவையை இப்போது இருந்து வருகின்ற எஞ்சினீயரிங் கல்லூரிகளே பூர்த்தி செய்து விடுமாம்!

எனவே இந்த உபகண்டம் முழுவதும் பதினன்கு எஞ்சினீயரிங் கல்லூரிகள் அமைக்கும் இந்த அரசாங்கம் தென்னகத்தில் ஒரு கல்லூரியைக்கூட அமைக்கப் போவதில்லை—என்று அறிவித்திருக்கிறது.

தெற்குப் பிராந்தியத்திற்கு 150 எஞ்சினீயரிங் பட்டதாரிகள்!

இதரப் பிராந்தியங்களுக்கு 3650 பட்டதாரிகள்!

—நினைத்துப் பார்க்க முடியவில்லை, — வடக்கு தென்னகத்திற்கு செய்யும் துரோகம் வரம்பை மீறிக் கொண்டிருக்கிறது.

ஏன் இந்த ஏற்றத் தாழ்வு? நூற்றி ஐம்பது எஞ்சினீயர்களே போதுமென்ற நிலைமை எப்படி உருவாயிற்று?

காரணம் ஒன்றுதான். தென்னகத்தில் தொழிற்சாலைகள் கட்டுவதற்கான திட்டங்கள் தகுந்த அளவில் இல்லை;எனவே தொழில் நிபுணர்கள் அதிகமாகத்தேவைப் படவில்லை!

அணைக்கட்டுகள் இல்லை; அதைக் கட்டுவதற்கான ஆய்வாளர்களுக்கு அவசியமும் இல்லை!

ஏன் இல்லை? தென்னகத்தில் அப்படியென்ன தொழிற்சாலைகள் மிகுந்துவிட்டனவா? தேனும் பாலும் தெருவிலே பெருக்கெடுத்து ஓடுகின்றனவா?

அதுவும் இல்லை.

வசதியிருக்கிறது ; அதைப் பயன் படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை!

வெட்டிய இடத்திலெல்லாம் தங்கக் கட்டிகளுண்டு—

தரையிலே கனிப்பொருள்கள்; தண்ணீரிலே சுந்தர முத்து மணிகள்—

எதற்குக் குறைச்சல் தென்னகத்தில்?

—சென்ற கிழமை சிம்சன் கம்பெனிச் சொந்தக்காரர் அனந்தராம கிருஷ்ணய்யரே கூறியிருக்கிறார்; புள்ளி விபரத்துடன் எடுத்துக் காட்டியிருக்கிறார் நாவலந் தீவு வேண்டுமென்றே வடநாட்டு நயவஞ்சகர்களால் மோசம் செய்யப்பட்டிருக்கும் தன்மையை!

★★ தெலுங்கானா, நெய்வேலி பகுதிகளில் நிலக்கரி கிடைக்கிறது.

★★ சேலம், ஆல்வாய் பகுதிகளில் பாக்ஸைட் கிடைக்கிறது.

★ இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி வருஷம் சுமார் 80,000 டன்கள் அலுமினியம் தேவைப்படும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.ஆனால் இப்போது கிடைக்கும் அளவே 10,000 டன்கள்.

★ சேலத்துச் சுரங்கப் பொருள் மட்டும் பயன்படுத்தப் பட்டால் இந்த உப கண்டம் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

★ அது மட்டுமல்ல; அலுமினிய வேலைகளோடு அதைச் சார்ந்து இயங்கக் கூடிய சிறு தொழிற்சாலைகளும் பெருக ஏராளமான வாய்ப்புகளுண்டு. உதாரணமாக 'அலுமினியக் கலப்பு உலோகப் பவுண்டரிகள்' ஒரு முக்கியமான சிறு தொழிலாக மாறமுடியும்!

★★ நெல்லூர் பிராந்தியத்திலே ஏராளமான **தாமிரம்** கிடைக்கக் கூடுமென்று கண்டு பிடித்திருக்கின்றனர்.

★★ தெலுங்கானாவிலும், நீலகிரி மாவட்டத்திலும், தமிழ் நாட்டின் இன்னும் சில பகுதிகளிலும் **தங்கம்** தோண்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

★★ இப்போது நெல்லூர் பகுதிகளில் எடுக்கப்படும் மைகாவிற்குச் சரியான வியாபார வசதிகள் செய்ய நெல்லூரில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டும்.

★★ தென் இந்தியாவின் சில பகுதிகளில் கிடைக்கக்கூடிய மண், **கண்ணாடி**த் தொழிலுக்கு ஆக்கம் தரக்கூடம்.

★★ தென்னாட்டில் கிடைக்கும் சில சுண்ணாம்பு—ஜிப்சம் தாதுப் பொருள்களால் உயர்தர **சிமிண்ட்** தயாரிக்க முடியும்.

★★ **சர்க்கரைத்** தொழிற்சாலைகள் இப்போது இருப்பதை விட இன்னும் அதிகம் இங்கே அமைவதற்கான அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

★★ தென் இந்தியா முழுவதும் **தோல்** பதனிடும் தொழில் சாலைகளை சிறந்த அளவில் அமைத்தால் அவை வெற்றிகரமாக இயங்க முடியும்.

★★ இங்கு ஏராளமாக **புகையிலை** உற்பத்தியாகிறது அவைகளை யெல்லாம் உடனடியாக வியாபாரப் பொருள்களாக மாற்றுவதற்கு சிகரெட் தயாரிப்பு போன்ற தொழிற்சாலைகள் அமைப்பது அதிகமான புகையிலை விளைச்சலுக்கு ஆக்கம் தரும்!

★★ எல்லோருக்கும் வேலை தருவதற்கு சாலை அமைப்பது ஒரு நல்ல சாதனமாகும்! மேலும் **சாலை அபிவிருத்தி** பற்றிய ஐந்து அல்லது பத்தாண்டுத் திட்டங்கள் கிராமங்களைச் செழுமையாக்கும்!

—இத்தனையும் நாம் காட்டும் ஆதாரங்கள் அல்ல! அனந்தராம கிருஷ்ணன்—'அவாள்' கூட்டத்தைச் சேர்ந்தவர்!—மார்ச் 21ம் தேதியன்று சென்னை கோகலே மண்டபத்தில் பேசிய கருத்தின் சாரம்தான் இது!

சம நீதி வழங்குவீர்!

என்ன அநியாயமய்யா இது? தென்னாட்டில் தொழில்கள் இல்லையாமே! இங்குள்ள விமானத் தொழிற்சாலை, ராடார் தொழிற் தொழிற்சாலை, பெரம்பூரிலே உள்ள 'கோச் பேக்டரி' — இவை எல்லாம் என்னவாயிற்று?

...இப்படியும் முணகல் எழலாம், 'ஏக பாரதப் பித்தர்'களிடமிருந்து!

அதற்கும் அனந்த ராமகிருஷ்ணன் பதில் சொல்லி யிருக்கிறார்.

''மேல் நாட்டில் ஒரு கார் உற்பத்தி சாலை இயங்குகிறதென்றால் அதற்குத் தேவையான சிறு சாதனங்களே அறுபத்தைந்து சதவீதத்துக்கு வருகின்றன. அவைகளெல்லாம் சிறு தொழில்களாக பக்கத்திலேயே இயங்குவதால் கார் உற்பத்தித் தொழில் பெருக வசதி ஏற்படுகின்றன.

''விமானத் தொழிற் சாலை, ராடார் தொழிற்சாலை, ரயில் பெட்டித் தொழிற்சாலை இவை வெற்றிகரமாக இயங்க வேண்டுமானால், அதைச் சார்ந்த சிறு தொழில்களும் இந்தப் பிராந்தியத்திலேயே ஏற்படுவதற்கான வசதிகள் செய்யப்படவேண்டும்!''

—இதுவும் அனந்தராமகிருஷ்ணன் பேச்சுதான்!

ரயில் பெட்டித் தொழிற்சாலைகளைப் பெயருக்காக இங்கே அமைத்துவிட்டு; கதவுகளுக்குத் தேவையான கீல் பட்டைகளை வடநாட்டில் தயார் செய்தால் பெரம்பூர் தொழிற்சாலை எப்படி வெற்றிகரமாக இயங்க முடியும்?

—இந்திய அரசினருக்கு இப்போது உண்மையிலேயே நெருக்கடியான நிலைமை உருவாகியிருக்கிறது!

தொடர்ச்சி 10-ம் பக்கம்

என். வி. நடராசன்.
ஆசிரியர், 'திராவிடன்'

16-99, அம்மன்கோவில் தெரு,
சென்னை-1.

திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

வணக்கம். நிகழும் 15-6-1956 (திருவள்ளுவர் ஆண்டு 1987 சித்திரைத் திங்கள் 3-ம்நாள்) ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரி கலா மண்டபத்தில், எங்கள் குமாரத்தி, செல்வி ராணிக்கும், திருவாளர் ஞாயிறு. ராசா அவர்களின் குமாரன், செல்வன் கலைச்செழியனுக்கும் திருமணம் நடைபெறும். அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைப்பார்கள் நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். அதுசமயம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணவிழாவினைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
என். வி. நடராசன் - புவனேசுவரி.

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 6--4--56 வெள்ளி

நாடு கேட்கும் நாகர்கள்!

ஊன் மறந்து, உடமை மறந்து, உரிமை முழக்கமே பெரிதென்று கொண்டு போர் தொடங்கி விட்டார்கள் அஸ்ஸாம் மாகாணத்தின் எல்லைப்புறத்திலே வாழும் நாகர்கள்!

அடிமையாக வாழ்வதை விட, ஆமையாக ஊர்வதை விட, ஒரு நிமிடமாவது அடலேறாக நிமிர்ந்து நின்று, அடிபணியோம்! அடிபணியோம்!! என்று அறைகூவல் விட்டுச் சாவதே மேலென்று விடுதலைச் சைன்யம் புறப்பட்டு விட்டது!

ஓங்கு புகழ் சூழ்ந்து வர, வீங்கும் தோள்கள் பகைத்தோளைத் தேடி அலைய, நாகஸ்தான் கோரிக்கை நானிலமெங்கும் பறைசாற்றப் பட்டிருக்கிறது!

பிசோ — பிரஜா சோஷலிஸ்ட் கட்சியல்ல! நாகமெனச் சீறி நாடு கவரும் ஏகாதிபத்தியக் கள்ளர்களால் கணையூட்டும் நாகர்களின் தலைவர்! அவரைத் தேடி அலைகிறது பண்டிதரின் போலீசார்!

இல்லை; இல்லை! போலீசார் போதாதென்று ஒரு உயர்தர இராணுவ அதிகாரியை அழிவு வேலைக்குத் தலைமையேற்று நடத்தும்படி நியமித்திருக்கிறார்கள்!

விடுதலைகோரும் வாயைக் கிழித்தெறியும் வேலையை காந்தீயக் காவலர்கள் மேற்கொண்டிருக்கின்றனர்.

★ மார்ச் 25-ம் தேதியன்று மேகோசுங் என்ற இடத்துக்கு அருகே, சுங்ஷிபா என்ற கிராமத்திலேயிருக்கும் நாகர்களின் தலைமை அலுவலகத்தின் மீது குண்டுமாரி பெய்து, தூள் தூளாக்கியிருக்கிறார்கள்!

★ சேனுகார் கிராமத்திலேயுள்ள நாகர்களின் மற்றொரு தலைநகரம், இருந்தவிடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கிறது!

★ தலைவர் பிசோவின் நண்பரெனக் கருதப்படும் ஒருவர் சுடப்பட்டு பிறகு கைது செய்யப்பட்டிருக்கிறார்!

—நாகர்களின் குரல்வளையை நெறித்தெறியும் பணி இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் நடத்தப்பட்டு வருகிறது ஆளவந்தார்களால்!

இந்த நிலையிலேதான் நடமாடும் காந்தீயக் காவலர் என்று கருதப்படும் ஆசாரிய வினோபா பாவே—

"நமது நாட்டின் இராணுவத்தைப் பாதியாகக் குறைத்து, அல்லது முழுதுமே கலைத்து விட்டால் நாம் பக்கத்து நாட்டுக்காரர்களின் அச்சத்தைக் குறைத்துவிட முடியும்."

—என்று கருத்து தெரிவித்திருக்கிறார்! அதைக் காரி உமிழ்ந்திருக்கின்றனர் காந்தியச் சீடர்கள்!

எல்லைப்புறப் பாதுகாப்புக்குக் கூட அல்ல; பதவி சதமென்ற நிலைக்குத் தொல்லை தருவதாக இருந்தால் அவர்கள் அத்தனை பேரையும் சுட்டுப் பொசுக்குவதற்கென இராணுவத்தை வைத்திருப்பது போல் தெரிகிறது, அஸ்ஸாம் காடுகளிலே நாகர்களை உயிருடன் வேட்டையாடிக் கொல்லும் காட்சியைக் காணும்போது!

மலைவாசிகள்; நாகரிகம் தெரியாதவர்கள்; அவர்களைத் திருத்த வேண்டும்: பண்பாட்டை ஊட்ட வேண்டும்.

—இப்படி எத்தனையோ முறை உபதேசம் செய்த நேருப் பண்டிதர்தான் இப்போது சுட்டுத் தள்ளுங்கள்—என்று உத்தரவு போடுகிறார்!

நாங்கள் அவர்களுக்கு ஓரளவு அதிகமாகவே தன்னாட்சி உரிமை வழங்கியிருக்கிறோம். அதற்கு மேலும் அவர்கள் பிரிந்து போகவேண்டுமென்றால் அதற்கு நிச்சயம் நாங்கள் இடமளிக்கவே மாட்டோம்.

—பண்டிதரின் இறுமாப்பு தோய்ந்த வாசகங்கள் இவை!

பிசோவும், அவருக்குப் பின்னால் அணிவகுத்து நிற்கும் ஆயிரமாயிரம் நாகர்களையும் அழித்தொழிக்காமல் அமரமாட்டோம்—என்று எக்காளம் ஊதுவதைப் போலப் பேசியிருக்கிறார் பண்டிதர்!

நாகர்களும் பண்டிதரின் மிரட்டல் மொழிக்கும், உருட்டு விழிக்கும் பயந்து விடுவதாகத் தெரியவில்லை.

பலாத்காரம்; கொலை கொள்ளைக் குற்றங்கள்—இவையனைத்துமே பிசோ சார்ந்திருக்கும் குழுவினரைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன!

—இவைகள் எந்த அளவுக்கு உண்மையென்று தெரியவில்லை. கர்த்தரின் வேதப் புத்தகம் தவிர வேறொன்றுமறியாத மகாரியர்ஸ் பாதிரியார்மீதும் இதைப் போன்ற குற்றச்சாட்டுகளைத்தானே சுமத்தியிருக்கிறார்கள், வெள்ளை ஏகாதிபத்தியக் காவலர்கள்!

—எப்படியோ அஸ்ஸாமுக்கு அடுத்தாற்போல், விடுதலை வீரர்களுக்கு ஓர் துணை கிடைத்துவிட்டது!

அங்கே, சாவு, அல்லது சுதந்திரம்—என்று துந்துபி முழக்கம் 'ஏக பாரதத் தா'யின் காதுகளைச் செவிடாக்கும் விதத்திலே உரக்க ஒலித்துக் கொண்டிருக்கிறது!

இருபதாம் நூற்றாண்டின் சாதனைகள் என்னென்னவென்பது தெரியாது, அவர்களுக்கு!

மனித நாகரிகம் எந்தத் துறையில் முன்னேறி, இனி வரும் காலத்தில் எந்தத் திசை நோக்கிச் செல்லும்—என்பதை உணரமாட்டார்கள், அவர்கள்!

பறவைகளைப் போலத் திரிபவர்கள்; பசி வந்தபோது உண்டு, களைப்பு வரும்போது படுத்துறங்குபவர்கள்!

—அவர்கள் இதயங்களிலேதான் அரும்பியிருக்கிறது விடுதலை உணர்ச்சி!

கல்லுக் கடியில் தங்கம்; கடலுக் கடியில் முத்து என்பதைப் போல நாகரிகம் தெரியாதவர்கள்—என்று கருதப்படும் கூட்டம் இன்று விடுதலைக் கொடி தூக்கி, நாடு காக்கும் படைக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறது!

அந்த 'நாடோடி'களுக்குள்ள நாட்டுணர்ச்சியும் இல்லாது, உணர்ச்சியற்ற மரக் கட்டைகளாய் பலர் நம்மிடையே உலவிடக் காண்கிறோம்! அவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டும் நாகர்களின் எழுச்சி நடையை!

குடித்திடுவோம் உயிர்—
கொடுத்திடுங்கள் நாட்டை!

—என்று அவர்கள் பாடிடும் போர்ப் பாட்டு தோழர்களுக்கெல்லாம் தெம்பு தரட்டும்!

★

ஊமை 'நாயகர்'

'நான்சென்ஸ்'—நாக்கிலே நரம்பென்று ஒரு பொருள் இல்லாதார் உச்சரிக்கும் வார்த்தை இது!

சில மாதங்களுக்குமுன் டெல்லி பார்லிமெண்டிலே காமத் என்னும் அங்கத்தினர் அந்த அநாகரிக வார்த்தையை உபயோகத்ததற்காக சபாநாயகர் மாவ்லங்கர் அவரை வெளியேற்றினர்!

சென்ற கிழமை சென்னை சட்டசபையிலே அதற்கீடான நிகழ்ச்சியொன்று நடைபெற்றிருக்கிறது.

அமைச்சர் சுப்ரமணியம் என். கே. பழனிச்சாமியின் கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில், "மெம்பர் சொல்வது நான்சென்ஸ்." என்று கூறினராம்!

'அப்படித் திட்டுவது சரியல்ல!'—என்று சட்டம் பயின்ற அமைச்சருக்கு தோழர் பழனிச்சாமி சட்டம் சொல்லிக் கொடுத்தும் சுப்ரமணியனார் தன் சீற்றத்தைக் குறைத்துக் கொள்ளவில்லையாம்.

"மீண்டும் சொல்கிறேன்; நீர் சொல்வது நான்சென்ஸ்."
என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி, 'நான்சென்'சுக்கும், நாட்டாள வந்தவர்களுக்கும் உள்ள தொடர்பைக் காட்டிக் கொண்டாராம்!

'பார்லிமெண்டில் உபயோகிக்கக் கூடாத வார்த்தை'
—இது டெல்லி சபாநாயகர் தீர்ப்பு!

சென்னை சட்டசபையின் நாயகரோ, சபையில் நான்சென்ஸ் வார்த்தை அமைச்சர் ஒருவரால் 'கொன்னக் கோல்' வாசிக்கப்பட்டும் வாய் திறக்கக் காணோம்!

அய்யோ, பாவம்! அவரும் காமராசரைப் போல ஊமையாகி விட்டாரோ, என்னவோ!

★ வேதியரே! வீணாசை! ★

போர்க்கோலம் பூண்டிருக்கிறார் அய்யங்கார்! புதுமைகளைப் பேசவேண்டிய அந்தஸ்திலே உயர்ந்திருக்கும் சந்தானம் (அய்யங்கார்) புழு நெளியும் பேச்சுகளை, புதுமையென எண்ணிக்கொண்டு, ஆவேசக் கூச்சல் போட்டிருக்கிறார்.

கூச்சல்தான் அது! இன்னும் கூறவேண்டுமென்றால் — சாவு கொடுத்த வீட்டிலே மாரடித்துக்கொண்டு அழுகின்ற ஒப்பாரி போன்றதுதான் அது!

'சாகுந்தலம்' மட்டுமே, உலக இலக்கியத்தின் பொன்னேடு— என்று கருதிக் கொண்டு, செப்பி இருக்கிறார்; சமஸ்கிருதம் சிங்கார மொழியென்று! அந்த சமஸ்கிருதத்திற்கு சாமரம் வீச வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார். அவர்; அய்யங்கார் — அதனால் நமக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை.

எட்டிமரம்—அதிலே எப்படி மாங்கனியை எதிர்பார்க்க முடியும் ?

பாலைவனம்; அங்கே சோலைவனத்தின் குளிர்ச்சியா கிடைக்கும்?

சந்தானம் சொல்லுகிறார்; சமஸ்கிருதத்திற்கு ஈடான இந்தியின் பக்கம் தென்னவரின் கவனம் திரும்பவேண்டும் என்று! 'கவனம்' திரும்பிய காரணத்தால்தான் — 'கல்றறை'கள் எழும்பி இருக்கின்றன; மொழி காத்த தமிழ் மண்ணின் தியாகத் தழும்புகளாக! என்பதை மறந்துவிட்டு. ஆவேசத்தோடு பேசியிருக்கிறார்.

இந்தியைத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமாம்! ஏன் தெரியுமா ? அப்பொழுதுதான் தமிழர்கள் வடநாட்டில் போய் வியாபாரம் செய்ய முடியுமாம் !

கோட்டைக் கொடி மரத்தில்—ஒரு காலத்திலே தமிழனின் புகழ்க் கொடி பறந்துகொண்டிருந்ததை யாரும் மறுக்க முடியாது !

ஆனால், இன்று அந்தத் தமிழனே பிறந்த மண்ணிலேயே 'வாழ்வுஎங்கே' என்று ஏங்கிடும் நிலை ! -

சந்தானம் போன்றாரின் கண்களுக்கு இந்த சோகக் காட்சிகள் தெரியாததன் விளைவுதான்-

தென்னிந்தியர் வாழ்வு இந்தி படிப்பதில் அமைந்திருக்கிறது என்று திமிரோடு பேசியிருக்கிறார் சந்தானம்!

இந்தி வேண்டாம்; இந்தி நுழைவால் தமிழ் கெடும்; தமிழர் வாழ்வு பாழ்பட்டுப்போகும் —என்று தமிழறிஞர்கள் கூறும் போது,

தமிழர்தலைவர்கள் எல்லோரும் இந்தி வேண்டாம் என்று ஆதாரங்களுடன் கூறி விளக்கியும்,

'இந்தியை நுழைப்பதால்— எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் சமாளிப்பேன்' என்று ஒரு டாம்; ஆங்கிலமே பொது மொழியாக இருப்பதில் தவறொன்றுமில்லை என்று கூறி இருந்தும்,

சந்தானம் அய்யங்கார் சொல்வளமில்லா இந்திக்கு சல்லடம் கட்டுவது கேலிக்குரியதாக இருக்கிறது.

'கூலிக்கு மாரடிப்பவர்கள்' என்று சிலரைக் குறிப்பிடுவார்கள்; சந்தானத்தின் பேச்சைக் கவனிக்கும்போது நமக்கெல்லாம் அந்த நினைவுதான் வருகிறது.

தமிழுக்கு — சரியாசனத்தில் மூக்கறுந்தவளாம் இந்தியைக் கொண்டுவந்து அமர்த்த முடியுமாம்! அது ஒன்றும் கடினமான காரியமல்லவாம்!

கிழவியைக் குளிர் வடிக்கும் குமரியாக்கி விடுவாராம் ! பிணத்திலே பரிமளகந்தம் வீசச் செய்வாராம் !

நாட்டின் தேசிய மொழியாக இந்தி வளர்ந்து வருவதை யாராலும் தடுக்க முடியாது என்று பயமுறுத்தி இருக்கிறார் சந்தானம் !

இந்தியாவை ஒரு 'தேசம்' என்ற மயக்கு வாதத்தையே ஒப்புக் கொள்ளாமல் இந்தியா ஒரு உப கண்டம் என்று-கூறி வரும் நம்மை 'தேசியத்'தைக் காட்டி மிரட்டப் பார்க்கிறார்.

"இந்தி மொழியை வெறும் விருப்பப் பாடமாக ஆக்க வேண்டும் என்ற சென்னை சர்க்காரின் முடிவு முட்டாள்தனமான வகுப்புவாத உணர்ச்சியின் காரணமாக எழுந்ததுதான் !" இப்படிப் பேசியிருக்கிறார் சந்தானம் !

வகுப்புவாத உணர்ச்சியாம்' புவனம் இவ்வளவு தூரம் வளர்ந்த பிறகும் 'பூணூலை' அறுத்துப்போடும் துணிவில்லாமல், வகுப்புவாதத்தின் மொத்த வியாபாரிகளாக உலவிக் கொண்டிருக்கும் ஆரிய வட்டாரத்தைச் சேர்ந்த அய்யங்கார், வேற்றுமொழியாதிக்கம் வேண்டாம் என்று கூறுவது 'வகுப்புவாதம்' என்கிறார்.

வட நாட்டு அரசியல் வாதிகளிடையே 'முட்டாள்' சீசன் ஆரம்பித்திருக்கும் இந்த நேரத்தில்; சந்தானமும் 'சின்ன' வார்த்தையை உதிர்த்திருக்கிறார் எல்லோரும் பேசுகிறார்களே நாமும் பேசி வைப்போம் என்ற நினைப்போடு !

பள்ளிகளில் இந்தி மொழி விருப்பப் பாடமாக இருக்கக் கூடாதாம். கட்டாயமாக்கப் பட வேண்டும், என்றும் உபதேசித்திருக்கிறார்.

ஊர் சிரிக்கிறது ; அய்யங்காருக்கு ஏற்பட்டிருக்கும் இந்த புதிய ஆசையைப்பார்த்து !

அப்படி கட்டாயமாக 'இந்தி' படிக்கா விட்டால் குறிப்பாக பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பாதிக்கப்படுவராம் ! எனவே பெரியோர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார்; தங்கள் 'பசலைகளை' இந்திக் கள்ளியின் சொறி பிடித்த மடியிலே புரள விடும்படி!

'மத்திய சர்க்காரிலே பதவி கிடைக்கும், அஞ்சல்—தந்தி நிலையங்களிலே எடுபிடி வேலையாவது உன் மகனுக்குக்கிடைக்கும் ஆகையால் இந்தியைக் கட்டாயமாக படிக்க வையுங்கள்' என்று கண்ணீர் வடிக்கிறார், 'பிற்பட்ட சமூகத்'தின் முன்னேற்றத்தில் அய்யங்காருக்கு ஏனோ இவ்வளவு 'அக்கரை' ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைக்கும்போதுதான் நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறது !

காலத்திலே கொக்கரித்த ஆச்சாரியாரே கட்டாய இந்தி வேண்

இன்று இந்தியை எதிர்ப்பவர்கள், நாடெங்கும் இந்தி கட்டாய பாடமாக்கப் பட வேண்டும் என்று கருதும் 'இந்தி ஏகாதிபத்திய வாதிகளின் 'கைப்பாவை' யாக மாறி விடுவார்களாம்!

இந்தி வெறியர்களின் ஏஜண்டாக மாறி இருக்கும் அய்யங்கார் இப்படி ஆருடம் கணிக்கிறார் !

தவறான ஆருடம் கணித்து வைத்திருக்கும் இவர், இந்திக்கு இப்பொழுதே 'பூரண கும்பம்' நீட்டி புன் முறுவல் காட்டி வரவேற்பு வழங்கி விடுங்கள் என்று சூசகமாக தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்நிலையில் வேதியரின் இந்த வீணாசைக்கு நம் அனுதாபங்களைத்தவிர வேறென்ன சொல்ல முடியும் ?

ஒரு தமிழன் உள்ள வரையில் அவன் உடலில் ஒரு சொட்டு குருதி ஒட்டிக் கொண்டிருக்கும் வரை, எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே நீ முழங்கு! என்ற முழக்கம் ஓயாது — தேயாது— திசையெட்டும் முரசொலித்துக் கொண்டுதானிருக்கும்! என்பதை சந்தானம் போன்றவர்களுக்கும், சமயம் கிடைக்கும் போதெல்லாம் விஷ நாக்கை சுழற்றி விடும் விபரீத மனிதர்களுக்கும் எச்சரிக்கை யாக்க விரும்புகிறோம்,

மீண்டும் தமிழகத்தை ரணகளத்திலே சந்திக்க நினைப்போர்; தமிழர்களின் மொழி உணர்வை துப்பாக்கி முனையிலேதான் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று இனியும் கருதுவோர்; கட்டாய இந்திக்கு ஆதிக்கம் தேட முயலட்டும்! அது பற்றி நமக்கு கவலையில்லை ஆனால், ஒன்றுமட்டும் அவர்கள் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழகத்திலே மீண்டுமொரு முறை இந்தி கட்டாய பாடம் என்ற உருவிலே திணிக்கப்பட்டால்—இந்தி ஆதிக்கம் தமிழ் மண்ணிலே படையெடுத்தால்,

அதுவே வடக்கு — தெற்கின் இறுதிப் போராட்டம்; உரிமைப் போராட்டம்; விடுதலைப் போராட்டம் என்பது உறுதி!

எருமைப் பண்புகொண்ட ஏகாதிபத்தியவாதிகளின் வேண்டாத தொடர்பை, தூவென்று உதறித் தள்ளிவிட்டு; நாம் புது வாழ்வு தொடங்கப் போகும் நாள் வெகுதூரத்தில் இல்லை; என்பதற்கான அறிகுறிகள் தான் : சந்தானம் போன்றவர்களின், 'வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சும்' இத்தகைய விபரீத விளையாட்டுகள் என்பதை இந்த நேரத்திலே நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாகிறோம்!

பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஓர் அரிய வாய்ப்பு!

சகல பொதுமக்களுக்கும். வியாபாரிகளுக்கும், கொள் முதல் விற்றுமுதல், ஏற்றுமதி இறக்குமதிவரை சகல வகையான வியாபாரக்காரர்களுக்கும், சர்க்கார் அதிகார பூர்வமான காரியங்களையும், வியாபாரிகளுக்காக இங்கே அவர்கள் வகையாக இருந்து செயலாற்றும் ஸ்தாபனம் இது.

இதன் மூலம் எல்லா ஊர்களிலுமுள்ள வியாபாரிகளும் அதிகப் பொருள் செலவும் கால நீடிப்பும் இல்லாமல் சுலபமாகத் தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ளலாம்.

வியாபாரிகளுக்குச் செலவில் சிக்கனமும், போக்குவரத்துச் செலவுகள்—கால தாமதம் ஆகியவைகள் குறைவதுடன் தாமத மன்னியில் விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும் பெரும் அநுகூலமாயிருக்கும் ஸ்தாபனம் ,மெட்ருஸ் க்ளைம் அண்டு சர்வீஸ் சின்டிகேட்'

இவ்வரிய சந்தர்ப்பத்தை, அனைவரும் எங்கள் ஸ்தாபனத்தின் மூலம் பயன்படுத்திக் கொள்ளும்படி கோருகிறோம்.

சிதம்பரம் ஜெயராம்,
தலைவர்.

கே. சேஷாத்திரி, எல். டி. சி.
எஸ். ஏ. சங்கரலிங்கம்.
பங்காளிகள்.

மதருஸ் க்ளைம் அண்டு சர்வீஸ் ஸின்டிகேட்,
த. பெ. நெ. 1004, நெ. 10-7, என். ஆர் ரோட், சென்னை-17.

கதையல்ல; வரலாறு :

பி.சி.கணேசன்.
பி.எஸ்ஸி;பி.டி.

[காலம்: பன்னிரெண்டாம் நூற்றூண்டு. இடம்: இங்கிலாந்து.

"ஆகா, என்ன அற்புதம்!"—கையிலிருந்த ஓவியத்தை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மைலோப் பிரபு, ஒரு பெருமூச்சுடன் மேற்கொண்டவாறு கூறிக்கொண்டார்.

"நல்லவேளை; அந்த ஓவியம் ஒரு ஆணுடைய ஓவியமாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் நீங்கள் இப்படிக் கூறியதைப் பார்த்து என் உள்ளம் என்னபாடு பட்டிருக்கும் தெரியுமா?" என்று கூறிக்கொண்டே, ஓவியத்தின்மீது விழியை ஓட்டினுள், அப்பொழுதுதான் அங்கு வந்த மைலோப் பிரபுவின் மனைவி அடிலேடு.

பளிங்குச் சிலை மாதிரி, அருகே வந்து நிற்கும் அடிலேடை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து அவர் ஒரு சிரிப்புச் சிரித்தார். அவள் கன்னங்கள் ஆப்பிள் நிறம் பெற்றன!

"அடிலேடு, இந்த ஓவியம் யாருடைய உருவத்தைத் தாங்கி நிற்கிறது என்பதை நீ அறிந்தால், நான் இந்த ஓவியததை ஊன்றிப் பார்த்துக்கொண்டிருந்ததன பொருள் உனக்கு விளங்கும்!"

"அப்படியா? அதில் இருப்பவர் யார்?" இப்பொழுது அடிலேடு ஓவியத்தை அவர் கையிலிருந்து வாங்கிக்கொண்டு, அதிலுள்ள ஆணழகனை விழுங்கி விடுபவள்போல் பார்த்தாள்!

"அவர்தான் அல்லன் பிரபு!"—புருவத்தை நெறித்தபடி, அவள்மீது வைத்தவிழி வாங்காமல் இதைச் சொன்னுர் மைலோப் பிரபு.

"என்ன? அல்லன் பிரபுவா?"—அடிலேடு அந்தப் பெயரைக் கேட்டவுடன் திடுக்கிட்டுப் போனுள். "பேரரசி மாட்டில்டாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மைலோப் பிரபுவின் கரங்களில், அரசியின் பரம வைரியான மன்னர் ஸ்டீபனின் வலக்கரம் என்று அழைக்கப்படும் அல்லன் பிரபுவின படமா? நீங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லையே"

"கவனமாகக் கேள், அடிலேடு, மர்மம் விளங்கும். வேல்ஸ் ஆளவரசனை மன்னன் ஸ்டீபனுக்கு உடந்தையாக்கும் சதித் திட்டத்தோடு அல்லன் பிரபு மாறுவேடமணிந்து இங்கு சீக்கிரமே வரப்போகிருர். நம்முடைய கிளாவ்செஸ்டர் கோட்டையைத் தாண்டித்தான் அல்லன் பிரபு வேல்ஸ் பிரதேசத்தில நுழைய முடியும். ஆகவேதான் மாறுவேடத்தில் வரும் அவரை அடையாளம் கண்டு கைது செய்ய உதவியாக அவருடைய திட்டத்தை அறிந்துள்ள அரசி மாட்டில்டா எனக்கு இந்தப் படத்தை அனுப்பியிருக்கிருர். அல்லன் பிரபுவை உயிருடனே அல்லது பிணமாகவோ, தன்னிடம் அனுப்பிவிட வேண்டுமென்பது அரசியின் கட்டளை. என்ன, இப்பொழுது விஷயம் புரிகிறதா?'

இதைக் கூறியவுடன், மைலோப் பிரபு சிந்தனையில் ஆழ்ந்தார்.

"அட்போலாவைப் போன்ற அழகுமிக்க இந்த அல்லன் பிரபுவை உங்கள் கத்திக்கு இரையாக்க உங்கள் மனம் சம்மதிக்கப் போகிறதா?" என்று படத்தை சலிப்பின்றிப் பார்த்துக்கொண்டே பேசினுள் அடிலேடு.

"அல்லன் பிரபுவின் அழகுமட்டுமல்ல, அடிலேடு; இன்னொரு முக்கியமான விஷயமொன்றும் அவரைக் கொல்லவோ, அல்லது பிடித்து அரசியிடம் அனுப்பவோ முடியாமல் என்னைத் தடுக்கிறது. அல்லன் பிரபுவை அரசிக்குக் காட்டிக் கொடுத்தால் செய்நன்றிக் கொன்றவனுவேன்"

அடிலேடு ஆவலோடு மைலோப் பிரபுவின் முகத்தைப் பார்த்தாள்.

"நான்தான் உனக்கு முன்பே கூறியிருக்கிறேனே; பிரான்சோடு போர் நடந்த பொழுது,, நான் அங்கு அகப்பட்டுக் கொண்டு கையில் பணம் ஏதும் இல்லாமல் பசியால் வாடி, நாடு திரும்ப முடியாமல் அங்கேயே இறந்துபோய் விடுவேனே என்ற நிலையில் இருந்த பொழுது முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் என்னிடம் இரக்கம் காட்டி உதவிசெய்து நாடு திரும்ப ஏற்பாடு செய்தார் என்று. அப்பொழுது அவர் யாரென்று நான் தெரிந்து கொள்ளவில்லை. இந்தப் படத்தைப் பார்த்த பின்தான் அன்று எனக்கு இடுக்கண் வந்தபோது உதவியவர் அல்லன் பிரபு என்று தெரிகிறது. அன்று அவரிடம் கூறினேன், உங்களுடைய உதவிக்குக் கைம்மாறு செய்யும் வாய்ப்பின்றி சாகமாட்டேன் என்று. என்னுடைய வாக்குறுதியை நிறைவேற்ற எனக்கு சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது" என்று கூறிவிட்டு, சிந்தனையில் மூழ்கியவராய் மைலோப் பிரபு அங்கிருந்து நகர்ந்தார்.

"ஆகா முகத்தில் தெய்வக்களையல்லவா தாண்டவமாடுகிறது. இப்படிப் பட்ட எழில் உருவுக்குத் தீங்கிழைக்க முயல்பவர் எவராகுல் என்ன, அவருக்கு என் நெஞ்சத்தில் இடமில்லை" என்று படத்தைப் பார்த்துப் பரவசமடைந்து தனக்குள்ளேயே பேசிக் கொண்டாள் அடிலேடு!

அடிலேடு அழகி; அவள் கண்கள் காமனின் கணைகள். கலைகளிலோ அவளுக்கு நல்ல தேர்ச்சி. கடைந்தெடுத்த பாவைக்குத் தங்க முலாம் பூசியது போன்ற மேனி. பருவ எழில் கொழிக்கும் அங்கம்; பார்ப்போரை வெறி கொள்ளச் செய்யும் இளமையின் பூரிப்பு. இப்படிப் பட்ட பெண்ணொருத்தியை வீட்டிலே வைத்திருப்பதே ஆபத்து என்று கருதிய அவளுடைய பெற்றோர்கள். கன்னிக்கேற்ற கணவன் கிடைக்கும் வரையில் அவளை சரியான கட்டுக் காவலில் வைக்க எண்ணிக் கன்னிமாடம் சேர்த்தனர் மணாளன் தேடும் பணியை மங்கை பெற்றோருக்கு வைக்க வில்லை. அகன்ற மார்பு. ஆஜானுபாகுவான தோற்றம்...வயது சற்று அதிகமானலும் வாலிப வனப்புக் குன்ருப் பார்வை—மைலோப் பிரபுவிடம் மனதைப் பறிகொடுத்த அடிலேடு, கன்னிமாடத்திலிருந்து அவரோடு ஓடி விட்டாள். அவரை மணந்து இல்லறத்தில் ஈடுபட்டாள்; மைலோ பிரபு களம் பல கண்டவர்; விழுப்புண் நிரம்பப் பெற்ற அவருடைய மார்பு, கோழையையும் வீரனுக்கும். கோட்டை கொத்தளங்கள்—அவருக்குச் சொந்தமாகப் பலவுண்டு. இருந்தும், அடிலேடு அவரோடு வாழ்வதில் திருப்தி காண முடியவில்லை. எப்பொழுதும் போரைப் பற்றியே பேசிடும் அவருடைய பேச்சு, கலையார்வம் மிக்க அவளுக்குக் களிப்பூட்ட வில்லை. வாழ்க்கையில் ஏதோ ஒன்று குறைபட்டு நிற்பதை அவள் உணர்ந்தாள் வயதில் அவருக்கும் அவளுக்கும் உள்ள வேறுபாடு, அக்குறையை இன்னும் அதிகப்படுத்திக் காட்டிற்று. சலனமுற்றிருந்த அவள் உள்ளத்தின் சஞ்சலத்தை—அந்தப் படம் அல்லன் பிரபுவின் அழகுருவம் ஆழப்படுத்தி விட்டது. கவசமணிந்த மார்பு, இரத்தக் கறை தோய்ந்த வாள், கொடுமை உமிழும் கண்கள்—இந்த மைலோப் பிரபுவின் உருவம்; அறிவின் தெளிவைக் காட்டும் கண்கள், அமைதியும் இரக்கமும் இணைந்து இலங்கும் தோற்றம், நாகரிக பாவம்—இவற்றினைத் தெளிவுற எடுத்துக் காட்டும் அல்லன் பிரபுவின் படம், அடிலேடு சீர்தூக்கிப் பார்த்தாள். அல்லன் மீது அவளுக்கு ஒரு பாசம் பிறந்தது படத்தைப் பார்க்கும்போதெல்லாம் அது வளர்ந்தது. அல்லன்மீது ஒரு சுண்டு விரலும் படுவதைப் பொறுக்க முடியாத ஒரு நிலையை அடைந்தாள்.

ஒருநாள் மாலை; கையெழுத்து மறையும் நேரம் கிளொவ்செஸ்டர் மாளிகைக்குச் சற்று அப்பால் முகம் தெரியாமல் முக்காடிட்டு மறைத்துக் கொண்டு ஒரு உருவம் மெதுவாக வருகிறது.

"யாரது?......நில்!"

முக்காடிட்ட உருவம் மெதுவாக நிற்கிறது.

"உங்களிடம் தனியாக ஒரு வார்த்தை பேசவேண்டும். சற்று கோட்டைக்குள் வருகிறீர்களா?"

"மெதுவாகப் பேசினுல்கூட என் காது கேட்கும்—கூறவேண்டியதை இங்கேயே கூறலாமா?"

"சுவர்களுக்குக்கூட இருட்டில் காது கேட்குமாமே! நான் பேச வேண்டியது மிக முக்கியமான விஷயம். ஆகவே தயவுசெய்து கோட்டைக்குள் போய்விடலாமே"

"உங்களைப் பார்த்தால் நல்லவராய்த் தோன்றுகிறது. ஆகவே உங்களை நம்பிக் கோட்டைக்குள் வருகிறேன்"

கோட்டைக்குள்ளே இரண்டு உருவங்களும் சென்றன. கோட்டைக் கதவு மூடப்பட்டது.

"அல்லன் பிரபுவே, நீங்கள் இப்பொழுது என்னுடைய கைதி!"—மைலோப் பிரபு 'கடகட'வெனச் சிரித்தார்.

"நம்பிக்கைத் துரோகம்!" உடைவாளை உருவமுயன்ருர் அல்லன்.

"துரோகமல்ல, அல்லன்! எல்லாம் உங்கள் நன்மைக்கே!"

"இந்தக் குரல் எங்கோ கேட்ட மாதிரி இருக்கிறதே. முகம் கூட..."

"ஆம், பல ஆண்டுகளுக்கு முன் இந்தக் குரல் உங்களிடம் யாசித்திருக்கிறது. இந்த முகம் இன்று உயிரோடு உலவுவது, உங்கள் பிச்சைதான்...மாரிக்னி கிராமத்தில் உங்களிடம் உதவி நாடி வந்த இளைஞனை ஞாபகம் இருக்கிறதா?"

மைலோவை, அல்லன் இப்பொழுது நன்ருக அடையாளம் கண்டு கொண்டார். மைலோ, அல்லனிடம் தான் உதவி பெற்ற வரலாற்றினை விளக்கினுர். அரசி மாடில்டாவின் உத்திரவினை அவருக்கு எடுத்துக் கூறி தனக்குஅனுப்பியதுபோலவே, வேல்சைச் சுற்றியுள்ள இதர பிரபுக்களுக்கும் அல்லன் படத்தை அரசி அனுப்பியிருப்பதாகவும், ஆகவே இப்பொழுது அவர் பிரயாணத்தைத் தொடர்வது அவருடைய உயிருக்குப் பயங்கரமான ஆபத்தாக முடியுமென்றும் மைலோ எச்சரித்தார். தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்பதற்காக அரசன் ஸ்டீபனுக்குச் செய்யவேண்டிய தன்னுடைய கடமையிலிருந்து வழுவ அல்லன் விரும்பவில்லை. கொஞ்சநாள் தன்னுடைய மாளிகையில் தங்கியிருக்கும் படியாகவும், அவரைத் தேடி அரசி அனுப்பின் காவலையும் கண்காணிப்பையும் தளர்த்தி விடுவாளென்றும், மைலோ யோசனை கூறவே, அல்லன் அதைத் தட்ட முடியாமல் ஒப்புக் கொண்டார். ஆபத்துக்காலம் முடிந்தவுடன், குறுக்குப் பாதைகளை நன்ருக அறிந்த ஆளொருவன் துணையுடன் அல்லன் பிரபுவை வேல்சுக்கு அனுப்பி வைப்பதாகவும் மைலோ உறுதியளித்தார்.

அல்லன் கிளொவ் செஸ்டர் கோட்டையில் மைலோப் பிரபுவின் குடும்பத்தினரில் ஒருவராக சில நாட்களிலேயே பழக ஆரம்பித்து விட்டார். இனிக்கப் பேசும் சுபாவம்; எவரிடமும் பாசமும் பரிவும் காட்டிப் பழகும் தன்மை எல்லோரையும் அவர்பால் ஈர்த்தன. சுலபத்தில் எவரும் கண்டு கொள்ளாத வகையில் தன்னுடைய தோற்றத்தில் சிறு மாறுதல்களை உண்டாக்கிக் கொண்டிருந்தார், அப்படி யாராவது அவரை அடையாளம் கண்டு விட்டால்கூட அவரைக் காட்டிக் கொடுக்கத் துணிய மாட்டார்கள். அப்படி எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து விட்டார் அல்லன் பிரபு. அவர் அங்கு வந்த இரண்டொரு தினங்களிலேயே, அழகி அடிலேடு தன்னிடம் தேவைக்கு அதிகமான கவனம் செலுத்துவதை உணர்ந்தார். கணவன் அருகில் இருக்கும் பொழுது களையிழந்து காணப்படும் அவள் முகம், அவர் சென்றபின் அல்லனேடு தனியாக இருக்கும் பொழுது, காரணம் இன்றிச் சிவப்பதையும், அவர் அவளைப் பிரிய நேரும் பொழுது, அவள் கரு விழிகளில் ஏக்கம் படர்வதையும்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

"இறுதிக் கட்டம் இன்பமாக முடியுமென்று எதிர்பார்த்தேன். அந்த ஆசையில் மண்ணைப் போட்டுவிட்டார் பி. டி. ராசன்!"

மாநிலச் சீரமைப்பு மசோதா பற்றி இராசன் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை மறுக்க முற்பட்ட மாநிலத்து நிதியமைச்சர் சுப்பிரமணியனார் அவர்கள் மேற்கண்ட வாசகத்தைத் தமது தரம் இழிந்த உரையின் இடையே செருகிக்கொண்டு சிறுநரி சிங்கமென எண்ணிச் செம்மாந்திடுதல்போல் சந்துமுனைப் பண் எழுப்பி மகிழ்ந்திருக்கிறார் சட்டசபைக் கூட்டத்தில்!

இறுதிக் கட்டம் இன்பமாக முடியுமென்றுஎதிர்பார்த்தாராம். இழிமகள் ஒருத்தி மாற்றான் மடியிலமர்ந்து மணவாளனுக்குத் துரோகம் புரிந்திடுங்காலை, அதனைக் கண்டு சினந்த ஒரு தூயோன் "அடி பேதாய்! நச்சரவே! நாயகனுக்குத் துரோகம் செய்திடுதல் நியாயந்தானோ" எனக் கேட்க—அதற்கு அப்பதிவிரதை, "முத்தத்தின் இடையே புகுந்துவிட்டாய் பித்தனே! முடிவுக் கட்டம் மோகம்நிறை கட்டமாய் இருக்குமென எதிர்பார்த்தேன், ஆசையில் மண் வீசிவிட்டாயே; அடுக்குமா இந்த அநீதி! ஆகுமா இத் தகாப் போக்கு! ஆளன் இருக்கட்டும் வீட்டிலே; இதோ இந்தப் புதிய கண்ணாளனோடு போதை அமுது பருகிவிட்டு வருகிறேன், பொல்லாங்கெனக் கூறாதே இதை! போ; போ போய்விடு!"—எனப் பொழிந்தாளாம் புழுதிச் சொற்களை! இழிமகள், இன்பகரமான இறுதிக் கட்டத்தை எதிர்பார்க்கிறாள், இடையிலே எதிர்ப்பை மறுக்கிறாள். எருவாக வேண்டிய பொருளனைய சொற்களை வீசி சுப்பிரமணியனாரும் அலறுகிறார்; அய்யகோ, இறுதிக் கட்டம் பாழாகிவிட்டதே என்று!

மழலையின் பிஞ்சு விரல்களை அறுத்துக் கொடுத்துவிட்டு, விரலை நறுக்கியது எனக்கும் வேதனையைத்தான் அளித்தது — என் செய்வது; எனையாளும் தேவிக்கு விருப்பமான காணிக்கையன்றோ அது; என மொழிந்திடுகின்றான் பக்தன்! தேவிதாசன்!

அவனுக்குஅண்ணனாக மாறிக்கொண்டு, தமிழகத்துப் பகுதிகளாம் தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை முதலியவைகளைத்தந்துவிட்டு என்செய்ய இருக்கிறது, எமக்கும் வேதனைதான் — எனத் தெரிவிக்கிறார்கள் நாடாள வந்த அமைச்சர் பெருமக்கள்! நாத் தழும்பேறியவர்கள்! நரகல் நடையின் ஏகபோக உரிமை பெற்றவர்கள்! நடுங்காத நாக்கழகர்கள்! 'நான்சென்ஸ்' உற்பத்தியாளர்கள்!

கொள்ளையடிப்பவனுக்குக் கன்னக்கோல் எடுத்துத் தருவார்களாம்—குயிலே என அழைத்தவனுக்கும் கொய்யா இதழ் பரிமாறுவார்களாம், குரங்காட்டம் போடுவார்களாம், கொத்தடிமை குடியடிமை என முறிச் சீட்டு எழுதித் தந்து மாநிலத்தையே அடமானம் வைப்பார்களாம்—அவமானம் பூணுவார்களாம்; 'ஆகாது இம்முறை' என அழுத்திச் சொன்னால், அடாணா ராகத்திலே 'விட்டேனா பார்' என விழுந்து கொத்துவார்களாம் — வேடிக்கையான கங்காணிகள்! விபரீதமான காவடிகள்! வெந்த புண்ணில் வேலெறியும் "ஆவடி"கள்!

சென்னை ராஜ்யம் என்ற பெயரை மாற்றித் **தமிழ் நாடு** எனப் பெயரிடுக எனத் தமிழர்கள் ஒரு முகமாக முழங்குகிறார்கள். இது ஆள வந்த அதிசயப் பிறவிகளின் மூளையைக் குடைகிறதாம், தமிழ் நாடு எனப் பெயர் மாற்றுவது அவ்வளவு இன்றியமையாத ஒன்றல்லவாம்!

ஏட்டிலே சர்க்கரை என்று எழுதிப் படிப்பதால் இனிப்புச் சுவை ஏற்பட்டு விடுமா?

இப்படி ஒரு அமைச்சர் கேலி புரிகிறார், அவரும் தமிழர்தான்! தமிழருக்குப் பிறந்தவர்தான்!

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே!" என்ற பாரதியின் பாட்டைப் படித்து, ஆகா; செந்தமிழ் நாடென்றால் காதிலே மட்டுமா தேன் பாய்கிறது; அந்தப் பாட்டைக் கேட்கும் போது கருத்திலும் தேன் பாய்கிறதே—எனப் பாராட்டு வழங்கிய பக்த வத்சலந்தான்!

அவர்தான் கேட்கிறார்; ஏட்டுச் சர்க்கரை இனிக்குமா என்று!

தமிழ் நாடு என்பது ஏட்டுச் சர்க்கரைக்கு இணையானதாம். ஓட்டு வேட்டையில் தோற்றுப் போய்-ஒளிந்து மறைந்து மந்திரியாக மாறிய உத்தமருக்கு தமிழகம் ஏட்டுச் சர்க்கரை ஆகிவிட்டது!

சென்னை ராஜ்யம் என்றால்தான் எல்லோருக்கும் தெரியும், தமிழ் நாடு என்பது உலகறிந்த பெயரல்ல!

உலகம் சுற்றிய பெரு வீரர்(?) காமராசர் கழறுகிறார்: இந்தக் கயமை வழியும் கடு மொழியை!

அம்மவோ! தாயே! தமிழ் அன்னாய்! உந்தன் புதல்வர்களிலே ஒரு சில வீடணர்கள் வீசும் கணைதனைக் கண்டாயோ, அம்மா! உன்னை உலகம் அறியாதாம்! தேனும் பாலும் ஊனும் உயிரும் உனக்கு நிகரில்லையெனக் கூறும் தமிழ்ப் புதல்வர்கள் பல்லோர் சாகாமலிருக்கும் போதுதான் தாயே; சண்டாளர்கள் சிலர் அகிலமறியாதவள் நீ எனஅஞ்சாப் பொய் கூறி அவையை மாசு படுத்துகின்றனர்,

கிரேக்கத்து அழகிகளும், ரோமானிய வீரர்களும், யவனத்துப் பெரு மக்களும் நீ இருக்கும் திக்கு நோக்கித் தவங்கிடப்பரே; முத்து வருமா? முகில் கண்டாடும் மயில் வருமா? என வாணிப நாவாய்களை வழிமேல் விழி வைத்து நோக்கி யிருப்பரே! அத்துணைப் பெருமை பெற்ற உன்னைத்தான் தாயே, உலகமறியாதவள் என்று கிணற்றுத் தவளை கூறுகிறது!

"திரைவிரி தரு துறையே!
திருமணல் விரி யிடமே!
விரைவிரி நறுமலரே மிடைதரு
பொழிலிடமே!"

என இளங்கோவடிகள் ஏற்றிப் புகழ்ந்த எனதருமைத் தாயகமே! உன் மடியிலே தவழ்ந்த மக்களிலே சிலர், உனக்கு மாசு கற்பிக்கத் துணிந்து விட்டார்கள், அம்மா! உன் புகழைக் குறைக்கப் புறப்பட்டு விட்டார்கள், அம்மா! அங்கம் அங்கமாக உன்னை அறுத்துக் கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பதென்று 'அனுமார்கள்' எல்லாம் தங்கள் சங்கத்தில் தீர்மானம் போட்டு விட்டன, தாயே!

என்னைப் பெற்ற என் குடும்ப விளக்கே! சேரனும், சோழனும், வீரனும் பாண்டியனும் செருமுனையில் வாள் சுழற்றி சிலந்தியென வந்த பகை விரட்டி உன் சென்னியிலே மலர் சூட்டி சிரந்தாழ்த்தி செந்தமிழன்னாய் வாழ்க! வாழ்க! எனப்பண் இசைத்தார்கள்! அந்தப் பரம்பரையிலே பாசிபிடித்த மனித சடலங்களும் தோன்றுமென்று நாங்கள் நினைத்திடவே இல்லைதாயே! உன் உதிரத்தில் இந்த உலுத்தர்களுக்கும் இடமிருந்ததா? அய்யோ கேட்கவே வெட்கம்—வேதனை, உள்ளத்தைத் துளைத்திடுதே!

பல்வேறு மொழிகளிலே திருக்குறளுக்கு மொழிபெயர்ப்பு! உலகெலாம் புகழும் ஒப்பற்ற நீதி நூல் என்ற பெருமை! இங்குள்ள அமைச்சர் பெருமானோ தமிழகம் என்ற சொல்லை தரணியறியாது எனப் புகலுகிறார், புகலிடத்துக் கட்டளைப்படி புலம்புகிறார் எனினும் அது பொருந்துமாறே!

"தமிழுக்கு அமுதென்றுபேர்—
இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"
"தமிழை இகழ்ந்தவனை என்
தாய் தடுத்தாலும் விடேன்!"

புரட்சிக் கவிஞர் தந்த போர்ப் பரணியுடன் சாவா? வாழ்வா? எனக் களத்து மண்ணில் இலட்சோப லட்சம் தமிழ்க் குடியினர் நின்றிடும் நேரத்திலேதான் அரக்கு மாளிகைக்குள் அகல் விளக்கை எடுத்துச் செல்லும் துணிவைப் பெறுகிறார்கள் ஆட்சிக் கொடியின் கீழே அணி வகுத்திருப்போர்!

'எமை நத்துவாய் என எதிரிகள்
கோடி இட்டழைத்தாலும்
தொடேன் தொடேன்'

என எக்காள மிட்டு – எமது தாயகத்தை எமக் குரிமையாக்கும் வரையில் தூக்கிய கரத்தைத் தாழ்த்திடோம் என சூளுரைத்து விட்ட பட்டாளத்தை நோக்கித் தான் இழி மொழியும், பழிமொழியும் பேசித்திரிகிறார்கள்; இட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்க ஆட்சி நடை போடும் அபூர்வப் பிறவிகள்!

சோரம்போன சரித்திரம்!



அருமருந்தன்ன அன்னைக்குத் துரோகம் இழைத்துவிட்டு, அவளைக் கொன்றுபோடக் கொடுவாளும் ஓங்கி விட்டவன் மகனா? மண்மீது இருக்கவேண்டிய ஒரு உயிரா? இல்லை! இல்லை! அதுபோலத்தான் தமிழ்ப் பெருந்தாயே! உன்னை இகழ்ந்தவர்கள் மந்திரிகளாய்க் கொலுவீற்றிருக்கத் தகுதி மிகச் சிறிதும் இல்லாதவர்கள்—என நெஞ்சக் கொதிப்போடு கதறுகிறோம்; கண்ணீரால் கன்னத்தை சூடாக்கிக் கொண்டு!



தேவிகுளம்-பீர்மேட்டைத்தான் பறிகொடுக்கக் காரணமாகி மீளாப்பழி பூண்டீர்! சிறிய வேண்டுகோள் — அனைவரும் ஒப்பிடக் கூடிய கோரிக்கை, சென்னை ராஜ்யத்தைத் தமிழ்நாடு என அமைத்திடுக—தமிழ்நாடு என்ற பெயர் பொறித்திடுக என்பது! இதையாவது நிறைவேற்றி அணு ஆறுதல் வழங்குவீர்! — எனக் கேட்டார் போராட்டத் தலைவர் பி. டி. இராசன். அவர்மீது எத்துணை சீற்றம்! எத்துணை பாய்ச்சல்!!

"நான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டிருந்தவன். ராஜன் வேறு பரம்பரையில் வந்தவர். அந்த நாளில் பிரிட்டிஷ் சர்க்காருடன் அவர் விசுவாசத்தோடு இருந்தார்"

தமிழ்நாடு என்ற பெயரைக் கேட்பது தமிழ்ப் பெருமக்கள். தமிழர்களின் இன்றைய கூட்டணித் தலைவர் இராசன். தமிழ் என்ற பெயர் தர இயலும்—அல்லது; தர இயலாது—தாயை மதியோம்! எனப் பதில் பகன்றிருக்க வேண்டும் மந்திரியார்! மதிமந்திரிகள் அதைத்தான் செய்வர்; அரசியல் பண்பாட்டின்படி!

பாவம் சுப்பிரமணியனார்; நிதி மந்திரி மட்டும்தான்! அமைச்சரவையே அப்படித்தான்—மதியை பருவ காலத்து வானிலே மட்டுமே காணக் கூடிய பட்டாளம்! பரிதாபம்-பரிதாபம்!! மெத்தப் பரிதாபம்!!!

சுப்பிரமணியர் சுதந்திரப் போராட்டக்காரராமே; இருக்கட்டுமே-சுதந்திரப் போராட்டக்காரர் என்றால்சொந்த பூமியை சுருட்டி, சொகுசாக வாழும் மாற்றானின் காலடியில் வைக்க உரிமை படைத்தவரோ? பிரஞ்சு நாட்டு சரித்திரத்திலே புரட்சிக்கு எதிர்ப் புரட்சி என்று ஒரு அத்தியாயம் இருப்பதை அவர் மறந்துவிட்டாரோ? பொல்லாத அரசை எதிர்த்து புரட்சி விதைத்த தலைவர்கள் பலரின் தலைகள் அதே "கில்லட்டினு"க்குப் பலியாகிவிட்ட வரலாற்றை ஏனோ மறந்துவிடுகிறார்கள் மந்த மதியினர்! சரியோ—தவறோ, சரித்திரம் சில நேரங்களில் புரட்சிக்கு எதிர்ப் புரட்சியாகவும் திரும்பிவிடுகிறது! இங்கோ தவறு விளைப்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கும் வளைந்த செங்கோலர்கள் அது போன்ற சரித்திரத் திருப்பங்களை சந்திக்க முடியாத தொலைவுக்கா ஒதுங்கிக் கொள்ள முடியும்!

சுதந்திரத்திற்குப் போராடினாராம் — வடக்கத்தி சேட்டுகளின் சுதந்திரத்திற்கு! வளமிக்க திராவிடத்தை வேலியற்ற கொல்லையாக்கி, மேய்ந்தழிக்கும் வடதிசைக் காவலர்களுக்குத் தேவையான சுதந்திரத்திற்கு!

"தமிழகப் பகுதிகள் பறிக்கப்பட்டு நமக்கு அநீதி இழைக்கப்பட்ட போதிலும் தேசீய நலனை உத்தேசித்து இந்தப் படலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன்" என்று அவரோ முகாரி பாடிட வேண்டிய நிலையை அளித்து நீர் வழியும் கண்களை நிமிர்ந்தும் பார்க்காத ஆணவக்கார டில்லிக்கு வேண்டிய சுதந்திரத்திற்கு!

இமயத்தின் சுதந்திரத்திற்குப் பாடுபட்டு, எலியாக முயலாகத் தான் தென்னகத்தார் வாழவேண்டுமென்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு, "நீயே சரணமப்பா நேருவப்பா!" என நெடுஞ்சாஷ்டாங்கம் புரிந்திடவும் தயங்காத-நெஞ்சில் உறுதியற்ற நிதிமந்திரியார் தான்—தமிழகத்துப் பழம்பெரும் தலைவர்களில் ஒருவரான இராசன் அவர்கள்மீது குற்றச்சாட்டை வீசியிருக்கிறார். தமிழ் நாடு எனும் பெயரைக் கேட்பதற்கும் இந்தத் தருக்கு மிகுந்த குற்றச்சாட்டிற்கும் என்ன பொருத்தமோ: என்ன பொருத்தமோ யாமறியோம்!

"இராசனை இந்நாட்டில் நாம் விட்டு வைத்திருக்கிறோம். வேறு நாடாயிருந்தால் ஒழித்துக் கட்டியிருப்பார்கள்!"

இதுவும் நிதியமைச்சர் அருளிய அகிம்சா வடிவ சொற்கூட்டந்தான்!

அம்பேத்காரைக் கொண்டு அரசியல் சட்டம் தயாரித்தவர்கள்-காஷ்மீரில் கால் வைக்காதே என நேருவுக்கு ஒரு காலத்தில் கட்டளையிட்ட கோபாலசாமி அய்யங்காரின் கைகுலுக்கியவர்கள்—அரசு மலர்ந்ததும் ஆர். கே. ஷண்முகத்தின் அடி வருடி நிதி அமைச்சராக்கிப் பயன் பெற்றவர்கள்; தேசீய எதிரி ராமசாமி முதலியாருக்கு தெண்டனிட்டவர்கள், தேஷ்முக்கின் முதுகை சொறிந்து விட்டுக் கொண்டிருப்பவர்கள்.

இன்று செருக்கோடு கூறுகிறார்கள்; வேறு நாடாயிருந்தால் ஒழித்துக் கட்டி யிருப்பார்கள் என்று! இராசன், காங்கிரசிலே சேர்ந்தால் இவர்களில் பலர் அவர் காலின் கீழ் கிடப்பர் கட்டளையை எதிர்நோக்கி என்பது இராசனுக்குத் தெரியாமலில்லை!

நேற்று கதரணிந்த சீமான்கள் எல்லாம் காங்கிரஸ் இயக்கத்தின் தூண்களாக இன்று தோற்றமளிக்க வில்லையா? காலையிலே கட்சி மாற்றம் — மாலையிலே மாநாட்டுத் தலைமை என்ற விதத்திலே காங்கிரஸ் பெரு மன்றம் ஏற்றம் பெற்று வருவதை நாடு உணராமலில்லை!

ஒழித்துக் கட்டி யிருப்பார்களாமே இராசனை! இவர் தப்பி விடலாம் என்று கருதுகிறாரா? தமிழ் என்ற இன்பச் சொல்லை இழித்துரைத்த இந்த வண்கணாளர்கள் மக்கள் மத்தியிலே மதிப்போடு வாழ்ந்து விட முடியும் என மனப்பால் குடிக்கிறார்களா?

"**தமிழகம் கூடாது என்ற தருக்கன்**" — இப்படியல்லவா பட்டம் கட்டப்படும்!—அமெரிக்க நாட்டு நவீனம் ஒன்று; "அவமானச் சின்னம்" என்ற தலைப்பு கொண்டது—அதிலே இறுதிக் கட்டம் ஒரு கல்லறையைத் தோண்டிப் பார்க்கும்போது ஒரு கல்லிலே செதுக்கப் பட்டிருந்த எழுத்துக்கள்.

"இதனடியிலிருக்கும் ஆத்மா அணிந்திருக்கும் சிவப்பு வர்ணப் பட்டின் மீது "A" என்ற எழுத்து ஜொலிக்கிறது!" என்பதாக அமைந்திருந்தன!

"A" என்ற எழுத்து அவமானச் சின்னத்தைக் குறிக்கிறது அந்த நவீனத்தில்! அந்தக் கதையும் அதில் வரும் கதா பாத்திரமும் ஆசிரியரின் அனுதாபத்துக்குரியன.

நாம் நமது தமிழகத்து அரசியல் நிகழ்ச்சிக்கு அந்நூலை ஒப்பிட முடியாதெனினும் கல்லறையில் காணப்படும் "A" எனும் எழுத்தை தமிழ்நாடு என்ற பெயர் தேவையில்லை யென்று தீர்மானித்து விட்ட வீடணர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

"A" நீற ஒரு எழுத்தால் உணர்த்த[illegible]யாமல், "துரோகி!" "கங்காணி" [illegible]காட்டிக் கொடுத்தவன்" என்பன போன்ற கல்வெட்டுக்கள் தமது கல்லறையின் மீது அமைக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும், அதற்கான எச்சரிக்கையைப் பெற வேண்டியதும் எதிர் காலத்தை அலட்சியப்படுத்தும் அமைச்சர்களுக்குத் தேவையான அறிவுரையாகும்.

இந்த அறிவுரைகளை அமைச்சர்கள் ஏற்பார்கள் என நாம் நம்புவதற்கில்லை. தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்துவிட்டவர்கள் வேறு என்னதான் செய்யமாட்டார்கள்! தாயைப் புணர்ந்தவனுக்கு மகா பாதகம் தீர்த்த புராணத்திலே மன்னிப்பு வழங்கப்பட்டு — அல்ல அல்ல — பரிசு வழங்கப்பட்டு மோட்சக் கதவும் நீளத் திறக்கப்பட்டிருக்கிறது!

அந்தப் புராணத்தை பூஜிப்பவர்கள்தானே—தேசியத் திருவிளையாடல் புராணத்தின் கதாநாயகர்கள்! தாயைப் புணர்ந்தவன் புராணத்திலே மன்னிப்பு பெறலாம்!

அதனினும் கேடாக — தமிழை இகழ்ந்தவன் — புதிய தமிழகத்திலே மன்னிப்பை எதிர்பார்க்க முடியாது!

தமிழுக்கும் - தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வதைவிட ஒரு முழக் கயிறு—ஒருதுளி விஷம்—ஒரு பாழுங் கிணறு இவைகளில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதுசாலச் சிறப்புடைய காரியமாகும்!

"இராசனின் சரித்திரம் சோக சரித்திரம்" என்றாராம்! இருக்கட்டும் பரவாயில்லை; இவர்களின் சரித்திரம் "சோரம்போன சரித்திர"மாகவன்றோ இருக்கிறது!

நெஞ்சு எரிகிறதே—கண் கலங்குகிறதே — எழுதக் கை நகரவில்லையே—தமிழா! தோழா! சேர சோழ பாண்டியரின் வழி வந்த வீரா! தமிழர் வாழும் நாட்டுக்குத் தமிழ்நாடு எனப் பெயரிட முடியாதாம்; துரோகம்! துரோகம்! மன்னிக்கமுடியாத துரோகம்!

"தமிழ்நாடு காங்கிரஸ்" எனப் பெயர் வைத்திருக்கிறவர்கள்—நாட்டுக்குப் பெயர் "தமிழ்நாடு" என இருத்தலாகாது எனக் கூறிவிட்டார்கள்!

தலைமுறை தலைமுறைக்கும் மாறாத பழியைத் தேடிக்கொண்டு தமிழை—தமிழரை--தமிழகத்தை அவமானப்படுத்தி விட்டார்கள்! வடவருக்கு சோரம்போன சரித்திரத்திற்குத் தங்களைத் தாங்களே கதாபாத்திரங்களாக்கிக் கொண்டு விட்டார்கள்!

"தமிழ்நாடு" என்ற பெயரில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது!

உயர் குணமேவிய புலியே! உன் தீர்ப்பு என்ன?

உன் தாய்மீது வீசப்பட்ட பழி துடைக்க நீ எடுக்கும் நடவடிக்கை என்ன?

உன்னையே நீ கேட்டுக்கொள்! விடை கிடைக்கும்—இன்றில்லாவிட்டால்—நாளை; நாளை தவறினால் மறுநாள் - துரோகிகள் தூக்கி எறியப்படுவார்கள்! அதற்கு, உன் தோளை வலுவாக்கிக்கொள்! அறப்போர் வாளை கூர்பார்த்துக் கொள்! கவனம்! கவனம்!!

✱

ஏற்கவுமில்லை ; எதிர்க்கவுமில்லை!

★

புதிய மண்டலக் குழு அமைப்புக்கும். நமது திராவிடநாடு கோரிக்கைக்கும் உள்ள ஒற்றுமை பற்றியோ , வேற்றுமை குறித்தோ, இன்னும் நமது கழகக் கருத்து அறிவிக்கப்படவில்லை, அதற்குரிய அவசியமோ காலமோ இன்னும் ஏற்படவில்லை.

நாம் மண்டலக் குழுவை ஏற்கவுமில்லை—எதிர்க்கவுமில்லை—அதிகார பூர்வமாகக் கருத்து அறிவிக்கப்படவுமில்லை. எரியும் வீடல்ல, பிடுங்கின வரையில் ஆதாயம் என்று அவசரப்படுவதற்கு!

"நம் நாடு" 31—3—56.

அழகி அடிலேடு...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

அல்லன் அடிக்கடி கவனித்திருக்கிருர். அவர்கள் தனிமையில் இருக்கும் பொழுது, அவள் முக்கியமான விஷயமொன்றைச் சொல்ல முயல்வதும், நாணம் நடுவே குறுக்கிட்டு வார்த்தைகளை வெளிவராமல் தடுப்பதையும் அவர் உணர்ந்தார். இம்மாதிரி இரு வாரங்கள் கழிநதன. அழகி அடிலேடு, தன்னை ஆராதனைக்குரிய பொருளாக்கி விட்டாள் என்பதை அல்லன் உணர்ந்தார். நன்றி மறவாமல் இராஜத்துரோகக் குற்றம் என்பதை அறிந்தும், ஆபத்துகளுக்கு மத்தியில் அபயமளித்துக் காப்பாற்றிய மைலோவின் மனைவி அவருக்குத் துரோகம் செய்யும் வகையில் தன்னிடம் காட்டும் நேச உணர்ச்சியை அதனுல் விளைய இருக்கும் ஆபத்தை — அதில் மறைந்து கிடக்கும் துரோக சிந்தனையை — இன்னும் அதிக நாள் தங்கினுல் அந்தத் துரோக இச்சைக்குத் தானும் பலியாகி விடக்கூடும் என்ற பயத்தை அல்லன் எண்ணிப் பார்த்தார். நண்பருக்குத் துரோகம் செய்யாமல் இருக்க—அந்த நாரீமணியின் கற்பு கெடாமல் இருக்க, அன்றே அங்கிருந்து புறப்பட்டு விடுவது, மலை போல ஆபத்து வரினும் மனங் குலையாமல் பயணத்தைத் தொடர்வது என்று அல்லன் தீர்மானித்தார்.

"மைலோ, அரசன் ஸ்டீபனுடைய கட்டளையை நிறைவேற்ருமல் நான் இன்னும் இங்கு தங்கியிருப்பது முறையல்ல; அரசி மாடில்டாவின் படைபலம் முழுவதுமே என் வழி மறித்து நின்ருலும் சரி. நான் புறப்பட முடிவு செய்து விட்டேன்." என்ருர் அல்லன் மைலோவிடம்.

"இன்னும் சில நாட்கள் பொறுங்கள் நீங்கள வேல்சுக்குச் செல்லுவதாகக் கிடைத்த செய்தி தவருனது என்று எண்ணி, அரசி தன் படைகளைத் திரும்ப அழைத்து விடுவாள். நீங்களும் அபாயமின்றி செல்லலாம் என்ருர் மைலோ.

தங்கி விட்டுப் போகும்படியாக அடிலேடும் அல்லனை வேண்டிக் கொண்டாள். அவள் சொல்லால் பேசியதைவிட, விழிகளால் வேண்டிக்கொண்டதுதான் அதிகம். அல்லனின் முடிவை உறுதிபடுத்தஅதுவே போதுமானதாக இருந்தது.

"மைலோ, அடிலேடு, உங்களுடைய உபசாரத்திற்கு நன்றி. ஆனுல் எப்படியும் நான் இன்று மாலையே புறப்படவேண்டும்!"

"அப்படி நீங்கள் நிச்சயம் புறப்படத்தான் வேண்டுமென்ருல், நாளை பொழுது புலருமுன், கருக்கலில் புறப்பட்டுவிடலாம். உங்களோடு துணைக்கு இளைஞன் ஒருவனையும் அனுப்புகிறேன். அவன் பார்ப்பதற்கு ஒல்லியாக இருந்தாலும் இங்குள்ள காட்டுப் பாதைகளெல்லாம் நன்கு அறிந்தவன். திடீரென்று அபாயம் ஏற்பட்டாலும், தப்பிக்கும் உபாயம் அறிந்தவன். உங்களுடைய பிரயாணத்திற்கு வேகமாகச் செல்லும் இரண்டு குதிரைகளும் மற்றவைகளும் தயாரித்து விடுகிறேன். நீங்கள் காலையில் போகலாம்"— என்று மைலோ கூறினுர்.

அல்லனும் ஒப்புக்கொண்டார். இரவு மைலோ-அடிலேடுடன் உணவருந்தியபின் காலையிலேயே எழுந்து பிரயாணம் செய்ய வேண்டிய காரணத்தைக் காட்டி, அடிலேடுடன் உரையாடி நிலைமையை நெருக்கடியாக்கிக் கொள்ளாமல், இவ்வளவு காலம் விருந்தளித்து, அபயம் காட்டி ஆதரித்த அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொண்டு, படுக்கைக்குப் போனுர்.

★

அன்று இரவு வெகுநேரம் வரையில் அல்லனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. விரோதியானுலும் நன்றி மறவாமல் நலம் பாராட்டும் மைலோ கண்ணியம் மிக்க கணவன் இருக்க பிறிதொருவன்மீது கருத்தைச் செலுத்தும் அடிலேடு ஆகிய இருவரும் அவருடைய மனத்திரையில் தோன்றி ஏதேதோ பேசினர்.

அவர் தூங்க ஆரம்பிக்கும் பொழுதெல்லாம் அந்தப் பேசும சிலை அவருடைய கற்பனையில் தோன்றி தூங்கவிடாமல் அடிக்கும். நடுநிசிக்குப்பின் மெதுவாகச் சற்று கண்ணயர்ந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் எழுந்திருககும்படியாக யாரோ எழுப்புவதை உணர்ந்து, எழுநது கண் விழித்துப் பார்ததார், கீழ் வானம் வெளுத்திருந்தது. அருகில் மைலோ சொன்ன அடையாளபபடி ஒரு இளைஞன் பிரயாணத்துக்குத் தயாராக நின்றுகொண்டிருந்தான்.

"குதிரைகள் தயாரா?"

இளைஞன் தலையசைத்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அல்லன் பிரபுவும், அந்த இளைஞனும் கிளொவ் செஸ்டர் கோட்டைககு அப்பால் வெகுதூரத்தில் சென்று கொண்டிருந்தனர்.

அல்லன் வெகு தூரத்துக்கு அப்பால் நிழல்போல் தெரிந்த கோட்டையைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே சென்ருர்.

"உங்கள் எஜமானருக்கு இந்தப் பக்கத்தில் நல்ல செல்வாக்கு இருக்கிறது, அரசியிடம் நல்ல மதிப்பு; இல்லத்தை அலங்கரிக்க ஒரு எழிற் பேடு— நல்ல அதிர்ஷ்டசாலி தம்பி, மைலோ!"

"பிரபு, பேசிக் கொண்டிருக்க இது சமயமல்ல; காலைக் குளிர் கடுமையாக இருக்கிறது. குதிரையைச் சற்று வேகமாக விடுங்கள்", என்ருன் இளைஞன்.

அடிலேடைவிட்டு வெகுதூரம் வந்துவிட்ட பிறகுதான், அவள் பிரிவு தன்னுடைய இருதயத்திலும் ஒரு ஏக்கததை உண்டாக்கியிருப்பதை உணர்நதார். அந்தக் கரிய விழிகளின் காந்த சக்தி, அவருடைய உள்ளத்தை அவள்பால் இழுத்துக் கொண்டிருந்தது. இனி அநத அழகுச் சிலையைக கண்ணுல் கண்டு இன்புறும் சந்தர்ப்பமம இல்லை என்பதை எண்ணியவுடன் அவர் மனம் வேதனையில் ஆழ்ந்தது.

"உங்கள் எஜமானிக்குத் திருமணமாகி எத்தனை ஆண்டுகளிருக்கும்?"

"ஏழாண்டுகள் ஆகின்றன!"

"வீரத்தின் விளக்கமான மைலோவும், அழகின் சிலை வடிவமான அடிலேடும், சரியான ஜோடிகள்—இல்லை?"

"ஹீம் பகைப்புலம் மாய்க்கும் வாள், வீரத்தை விளக்கும் விழுப்புண் மார்பு, கொடுமையைக் காட்டும் கூர் விழிகள், இரக்கமற்ற இதயம்— இவை, பகைவனை பயப்படுத்தலாம்; பாவையின் உள்ளத்தை வசப்படுத்த இவைமட்டும் போதுமமெடது என்ன நிச்சயம்?"— அிளைஞன் கேட்டான்.

"ஏனப்பா பேசும்பொழுது உன்னுடைய உதடு இப்படித் துடிக்கிறது; கன்னங்கள் சிவக்கின்றன. சியாட்டியிடம் சிந்தை வைக்கும் அளவுக்கு நீ முட்டாளாக இருக்க மாட்டாயென்று நம்புகிறேன்,"

"எஜமானிக்கு என்னை நிரம்பப் பிடிக்கும், ஆனுல் அவர்கள் காதலிப்பது ஓமர ஒருவரைத்தான்......"

"ஆம், கணவன் மைலோவைக் காதலிப்பாள்......"

"அதுதான் இல்லை!"

"பின் யாரை?"

"உங்களையேதான்!"

இளைஞனின் துடுக்கான பதிலைக் கண்டு அல்லன் பிரபு துணுக்குற்ருர். கோபம்கொப்பளிக்கஇளைஞனை ஏறிட்டுப் பார்த்தார். அல்லன் அவனைப் பிடித்துத் தாங்கியிருக்காவிட்டால் இளைஞன் மயங்கிக் கீழே விழுந்திருப்பான். மெதுவாக அவனைப் பிடித்துக் கீழே படுக்கவைத்து விட்டு, அருகிலுள்ள ஆற்றுக்குப் போய் தண்ணீர் கொண்டுவந்து அவன் முகத்தில் அல்லன் தெளித்தார்.

நிலா முகத்தில் இரண்டு நீலோற்பல விழிகள் திறந்தன!

பெண்ணின் மார்பிரண்டும் விம்மி விரிவதைக் கண்ட அல்லன் திடுக்கிட்டார். இப்பொழுது, இளைஞனின் தொப்பியும் கீழே விழுந்துவிட்டது! பொன்னிறக் கூந்தல் கழுத்திலும் கன்னங்களிலும் தவழ்ந்து விளையாட இளைஞனுடைய உடையில் அழகி அடிலேடு படுத்திருந்தாள்!

நல்ல பகல் நேரம், தலையைக் கொண்டுபோகக் காத்திருக்கும் எதிரிகள்,அவர்களிடமிருந்து காப்பாற்றி அடைக்கலம் அளித்த அவருடைய நண்பரின் மனைவியோடு அவர்— இந்தப் பயங்கரத்தை அவரால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. எது நடக்கக்கூடாது என்று பயந்து ஓடோடியும் வந்தாரோ, அது நடந்தேவிட்டது!

அடிலேடை அவள் கணவனுக்கு காட்டிக் கொடுப்பதா? கைதி மாதிரி பதுங்கிப் பதுங்கிச் செல்லும் தன்னை நம்பி, கணவனையும் துறந்து வந்துவிட்டாளே! அவள்தான், தன்னேடு ஓடி வந்துவிட்டதாகக் கூறினுலும், மைலோவே அதை நம்புவாரா? அடிலேடின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும்,தான் நம்பிக்கைத் துரோகி அல்ல என்று நிரூபிக்க வேண்டும் — இந்த இரண்டையும் மைலோப் பிரபு நம்பவேண்டும் — இதையெல்லாம் நடக்கிற காரியமா? அல்லன் பிரபுவின் மூளை குழம்பி விட்டது.

"அல்லன், இப்பொழுது என்னை நீங்கள் மனமார வெறுக்கிறீர்கள் என்பது எனக்குத்தெரியும். என்னை ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லாவிட்டால், இதோ அருகில் ஓடும் ஆற்றிலாவது விழுந்து உயிர்விட அனுமதி தாருங்கள்"— என கண்களில் நீர் பெருக அல்லனை வேண்டினுள் அடிலேடு.

அழகு இரக்கும்போது, யார்தான் மனம் இளகமாட்டார்கள்?

"அடிலேடு, இப்பொழுது என் தலையைக் கொத்திக்கொண்டுபோக வல்லூருகள் வட்டமிடும்போது, மாடப்புருவாகிய உன்னை நான் வைத்து எப்படிப் பாதுகாக்க முடியும்?"

அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, சற்று தூரத்தில் குதிரைகளின் குளம்படி ஓசை கேட்டது.

"ஐயோ, மைலோ வருகிருர்: அல்லன், என்னைக் கைவிட்டு விடாதீர்கள்!" அடிலேடு, அல்லனுடைய மார்பில் ஒடுங்கினுள்.

"பைத்தியக்காரப் பெண்!"— என்று அவளை மார்போடுஅணைத்துக் கூந்தலைக் கோதினுர். சற்று நேரத்தில் இருவரும் குதிரைமீதேறி வேகமாகப் பறந்தனர்.

மைலோ, குதிரை வீரர்களோடு அவர்களை நெருங்கிவிட்டார். அம்பு எய்யும் தூரத்தில் வந்தவுடனே, "துரோகி, பிறனின் மனைவியைக் கவர்ந்து செல்லும் பேதையே, நில்! இல்லாவிட்டால் நீங்கள் இருவரும் என் அம்புக்கு இரையாகி விடுவீர்கள்" என்று மைலோ கர்ஜித்தார். தப்புவது முடியாது என்று அறிந்த அல்லனும், அடிலேடும் குதிரையை அப்படியே நிறுத்தினர்.

★: தொடர்ச்சி 10-ம் பக்கம்

திருச்சி மாநில மாநாடு

வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது

மே மாதம் 17, 18, 19, 20 தேதிகளில நடைபெறவிருக்கிற தி. மு. கழக மாநில மாநாட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

28—3—56-ந் தேதி இரவு அண்ணு அவர்கள் திருச்சி வந்து சேர்ந்தார்கள். மாநில மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில் தர்மலிங்கம், செயலாளர் எம். எஸ். மணி, ஜி. பராங்குசம் மற்றும் முக்கியஸ்தர்களுடன் மாநாடு சம்பந்தமாகக் கலந்து பேசிவிட்டு, 29—3—56-ந் தேதி மாலை மாநாடு நடைபெறவிருக்கின்ற பந்தயத் திடலை (ஜமால் மொய்தீன கல்லூரி சமீபம்) பார்வையிட்டு, முககிய மாநாடு கூடும் பந்தல் போடுவதற்கான இடத்தை குறிபபிட்டுத் தந்துள்ளார்கள்.

மாநாட்டுப் பந்தல் 1000க்கு 600 அளவிலும் (3 இலட்சம் பேர் உட்காரக் கூடியது) தவிர 50 'ஸ்டால்களும், ஏககாலத்தில் சுமார் 5,000 பேர் சாப்பிடக்கூடிய 4 உணவு விடுதிகளும் பெண்கள் தங்குவதற்குத் தனி உரையுள்ளும், மாவட்டப் பிரதிநிதிகள் தங்குவதற்கு மாவட்ட வாரியாக தனித் தனி உரையுள்ளும், போலீஸ் நிலையம், 'டெலிபோன்' நிலயம், அஞ்சல்-தந்தி அலுவலகம், தகவல் அறிவிக்கும் நிலையம், தீயணைகும் படையினர் தங்குவதற்கு உரிய அலுவலகமும், தொண்டர்கள் பாசறை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

ஓவியக் கண்காட்சிகள் அமைப்பதற்கானத் தனி இடம் அமைக்கப்பட்டு வருகிறது.

பொதுவாக மாநாடு நடக்கும் திடலை அழகு பொருந்திய ஓர் சிற்றூராக அமைப்பதற்கான ஏற்பாடுகளை, அண்ணு அவர்கள் திருச்சி கழக முக்கியஸ்தர்களுடன் கலந்து பேசி ஆவன செய்து வருகிருர்.

—மாநில மாநாடு விளம்பரக் குழுவினர்.

★ நம்பிக்கைத் துரோகமாமே!

சுதந்திரம் பெற்ற நாடுகளின் வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பார்க்கும்பொழுது, புலி வேடம் போட்டோர்முன்; எலிபோலும், முயல்போலும் அடங்கிக் கிடந்த மக்கள்; மண்டலங்களையேமாற்றியமைத்திடும் சக்தியை எங்கிருந்து பெற்ருர்களோ என்ற வியப்பு நம்மையெல்லாம் சிந்திக்கத் தூண்டுகிறது.

தமிழகம் மட்டுமல்ல; உலக நாடுகள் குழந்தைப் பருவத்திலே இருந்தபோது, அங்கெல்லாம்கூட இன்றும் தமிழ் நாட்டிலே இருப்பது போன்ற வேண்டாத கருத்துக்கள், வெள்ளிமாடத்திலே வைத்து போற்றப்பட்டன!

ஆனல் காலம் வளர வளர, அந்த தேவையில்லாத நம்பிக்கையும், தேவர் கூட்டமும்; தெருப் புழுதியிலே எடுத்து வீசப்பட்டுவிட்டன; அந்த நாடுகள் வேறு பாதையில்; விவேகம் அமைத்துத் தந்த விஞ்ஞானபுரியை நோக்கி நடைபோடுவதை இன்று நாம் பார்க்க முடிகிறது.

ஆனல் இங்கோ, ஓதலுக்கெல்கெல்லாம் மறுப்பும் — ஒப்பாரிக் குரலும் எழுப்புவதே விவேகம் என்று நம்புகின்றனர்; செய்கின்றனர்!

சிந்தனைத் தெளிவு பெருத பாமரர் மட்டுமல்ல; படித்து பட்டம் பெற்றிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் சிலர்களும், புதுமை கண்டு சீறுகின்றனர்!

★

துருப் பிடித்திருந்த துருக்கியின் அதிகாரம் தன் கையிலே சிக்கியவுடன், அந்த மண்ணை உலகத்தின் நோயாளியாக்கி வைத்திருந்த பழமைப் பைசாசத்தை வேரோடு களைந்தெரியும் பணியை, முதல், முதலாக செய்தான், வெற்றி கண்டான் கெமால்! என்று குறிப்பிடுகிறது அவன் நாட்டுப் புரட்சி ஏடு!

மக்களின் மன மருட்சியை மயிலாசனமாக்கிக் கொண்டு, 'உக்கா' தந்த போதையிலே உலகத்தை மறந்து மந்தகாச வாழ்வு நடத்திக் கிடந்த சுல்தான்கள் உருட்டிவிடப் பட்டார்கள்!

துருக்கி நாட்டு, பருவக் கிளிகளின், பட்டு மேனியிலே, பழக் கன்னங்களிலே, 'சுகம்' அனுபவித்துக் கொண்டிருந்த கலிபாக்களின் பொன்ஞசனங்களும்; போக வாழ்வும்; கெமால் ஆட்சி பீடம் ஏறியவுடன் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டு விட்டன; அவன் கொற்றம் கண்டு சீறியோர் கூக்குரலெழுப்பினர்!

நாட்டிலே இருக்கும் எல்லா மடங்களையும், மதஸ்தாபனங்களையும் கலைத்து மூடிவிட்டு அவற்றின் சொத்தை பறிமுதல் செய்து அரசாங்கத்திற்கு சொந்தமாக்கிக் கொண்டான்.

மதப் பாடசாலைகளை ஒழித்துவிட்டு, மதச் சார்பற்ற அரசாங்கப் பள்ளிகளைத் துவக்கினன்;

இவ்வளவு மாற்றங்களையும் சட்டத்தின் துணைகொண்டு செய்து காட்டினன்!

குரான் உபதேசகங்களை அடிப்படையாகக் கொண்ட 'ஷரீயத்' என்ற சட்ட தொகுப்பையே மாற்றி விட்டானும் அந்தமாவீரன்!

மதத்தின் பெயரால் மக்களுக்குப் பயன்பட முடியாமல் தடுத்து வைத்திருந்த 'மத அணையை' சட்டம் என்ற சம்மட்டி கொண்டு ஓங்கி அடித்தான்! மதபீடங்கள் சட சட வென்று சரிந்தன; ஆண்டவன் அமைப்புகள் ஆட்டம் கொடுத்தன; ஆதிக்கக்கோட்டை தவிடு பொடியாயிற்று.

நிலா முகங்களை, நெடுந் திரைக்குப் பின்னல் மறைத்துக்கொண்டு உலவிய துருக்கி மாதர்கள், புதுமைப் பெண்களாக நடை பழகலாயினர்.

அண்ட சராசரங்களைப் பற்றி அதுவரை மக்களிடையே இருந்து வந்த பயம், குறைந்தது.

மக்கள் வாழக் கற்றுக் கொண்டார்கள்,

ஆனல் இங்கோ...!

கோவில்களில் குன்றென குவிந்திருக்கும் செல்வம்; ஆண்டவன் பெயரால் தேக்கிவைக்கப் பட்டிருக்கும் பணத்தடாகம்!

ஆலய மணி; ஆறுகால பூஜை; அனுஷ்டானதிகள்; அய்யரின் வேதபாராயணம்; பால், பருப்பு, பழரசம் — அழுக்கேறிய கற்களுக்கு!

கண்ணிலே கண்ணீர், கையிலே கலயம், கந்தலாடை, காய்ந்ததலை!

'அய்யோ கடவுளே!' என்று அந்த எலும்புக் கூடுகள் எழுப்பும் சோகக் குரல்—நாடெங்கும்!

ஆரியம் இந்த மண்டலத்தில் காலடி எடுத்து வைத்த பிறகு, ஏற்பட்ட தழும்புகள்தான் ஆண்டவன் பெயருக்குச் சொத்தெழுதி வைக்கின்ற கோணல் வழிகள்! மடங்களுக்கும், மத ஸ்தாபனங்களுக்கும் 'உயில் எழுதி' உண்டு கொழுக்க ஒரு கூட்டத்தையே வாழவிட்டுப் 'போகும்' உலகத்திற்கு 'நல்லவழி' தேடிக்கொள்வதாக மக்களுக்கிருந்த ஒரு வித மயக்கம்; மனமருட்சி; அதுவும் ஆரியம் புகுத்தி விட்ட மாயாவாதம்! இத்தனையும் சேர்ந்து மலையெனக் கோவில்களிலே செல்வத்தைக் குவித்து விட்டது.

மூலைக்கு மூலை மடாலயங்கள் அங்கே தின்று புரளும் மனித மலைகள்!

மாடு போல் உழைப்பவன்; முதுகை மேடாக்கிக் கொண்டவன்; புறக் கூடு போல் இருக்கும் ஓட்டைக் குடிசையிலே நுழைகிருன் குனிந்தபடியே! அவன் நெஞ்சம் வேதனைக் காடாகிறது; நாட்டின் செல்வம் 'எங்கோ' முடங்கி விடுகிறது; சாந்தியெங்கே? என்று தேடுகிருன்: சாக்காட்டிலேதான் சமுதாயத்தால் ஏமாற்றப்படும் அந்த பரிதாபத்திற்குரியவனுக்கு 'சாவின்' வடிவிலே சாந்தி கிடைக்கிறது!

சொத்துக்குடையவர்களோ, சொறி நாய்களென திரிகிருர்கள்!

சோம்பல் வாழ்வு நடத்துபவர்களுக்கு சுகவாழ்வு கிடைக்கிறது!

மதத்தின் பெயரால் — ஆண்டவன் பெயரால்!

இந்த பேதம் தலை கீழாக மாற்றியமைக்கப் பட்டால்தான் மண் புழுக்களென துடித்துக் கிடப்போரின் விழி நீர் துடைக்கப்படும் என்கின்றனர் அறிஞர்கள்; அகிலத்தை உணர்ந்தவர்கள்!

ஏழைகள் வாழ்வு பெற வேண்டுமானல் நாட்டுக்கு ஒரு கெமால் தேவை என்கிறது; சுதந்திரம் பெற்ற நாடுகளின்; சரித ஏடுகள்!

ஆனல் இங்கோ, புதுவாழ்வுக்கு வழி கூறும்போது, புகைக்கிருர்கள்; புன்மைக் கருத்துக்களை எடுத்து வீசுகிருர்கள்!

ஆலயங்களிலே முடங்கிக் கிடக்கும் சொத்து, நாட்டின் பொதுக் காரியங்களுக்கு பயன் படவேண்டும் என்று கூறும்போது இங்குள்ள ஏடுகள், குறிப்பாக சுதேசமித்திரன் போன்ற ஆரிய ஏடுகள், பூணூலை உருவிக் காட்டி, மக்களை மிரட்டவும், மாற்றங்களை நினைப்போருக்கு மருட்சியை உண்டாக்கவும் முயற்சிக்கின்றன.

அந்த மிரட்டலை மித்திரன் சென்ற கிழமை தலையங்கமாகவே தீட்டியிருக்கிறது.

"கோவில்களிலே உள்ள சொத்துக்களைப் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கு முன், கோவில்களுக்கு சொத்தை எழுதி வைத்தவர்கள் எந்த நோக்கத்தோடு எழுதி வைத்தார்கள் என்பதை கவனிக்க வேண்டும்!

அதை மீறி செயல்படுவது, சொத்தெழுதி வைத்தவர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்வது போலாகும்" இப்படி 'இந்தா பிடி சாபம்!' என்ற பாணியிலே, நெற்றிக் கண்ணைத் திறக்க முயற்சிக்கிறது அந்த ஏடு!

மித்திரன் குறிப்பிடும் அந்த 'நம்பிக்கைத் துரோகத்தை' ஏகப் பிரதிநிதிகளாக இன்று முன் நின்று நடத்திக் கொண்டிருப்பவர்கள் யார்?

முன்பு சென்னை மாநிலத்து அமைச்சராக இருந்த நல்லவர் ஓமந்தூரார், ஒரு பட்டியலை வெளியிட்டிருக்கிருர், அவர் எழுதிய ஏடொன்றில்;

"ஆண்டவன் பெயரால் கோவில்களுக்கென்று தனவந்தர்களால் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கும் செல்வம், அந்த சொத்துக்களைப் பாதுகாப்பதாக கூறிக் கொண்டிருப்பயர்களாலேயே, விழுங்கப் பட்டு வருகிறது. சென்னை ராஜதானியில் இருக்கும் பெரும்பாலான கோயில்களில் களவாடப் பட்டதாக சொன்ன சொத்துக்கள், அந்தக் கோயில் நிர்வாகிகளாலேயே களவாடப் பட்டிருப்பதற்கு, பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன" என்பதாக.

'கோயில் செலவுகள் நியாயமற்றது என்று கூறுவது அறியாமை' என்று குறிப்பிடும் மித்திரன்;

ஓமந்தூரார் குறிப்பிட்டிருப்பது போல், நாட்டிலே இன்றுகோவில் சொத்துக்கள் இத்தகைய 'நியாயமான' வழிகளில் விரயமாவதை அனுமதிக்கிறதா?

கோவில்களிலே இருக்கும் தங்க நகைகள்; குருக்களுக்கு கொவ்வை இதழ் தரும் சித்தமுருக்கிகளின் கழுத்தை அலங்கரிப்பதைவிட கொடிய நோயால் சித்தத்தை உருக்கும் விதத்திலே துயரக்குரல்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

'ஸ்டால்'கள் காண்ட்ராக்ட் எடுப்போர் தேவை

1956 மே மாதம் 17, 18, 19, 20 ஆகிய நாட்களில், திருச்சி பந்தயத் திடலில் ''ரேஸ் கோர்ஸ்' மைதானம்)நடைபெற இருக்கும் தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டில் கீழ்க் கண்டவைகளை மொத்தமாகக் காண்ட்ராக்ட் எடுத்து நடத்த முன்வருபவர்கள், தங்களது அதிகபட்சத் தொகையைக் குறிப்பிட்டு எழுதி, அந்த விண்ணப்பத்தைச் சீல் போட்ட கவரில் வைத்து, 10—4—56–ஆம் நாள் மாலை 4 மணிக்குள், அ. பெ. தருமலிங்கம், வரவேற்புக் குழுத் தலைவர், மாநாட்டு அலுவலகம் 9, கிலேதார் தெரு, தெப்பகுளம் அஞ்சல், திருச்சி. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

மொத்தமாகக் காண்ட்ராக்ட்டுக்குவிடப்படுபவை :

10–க்கு 10 அடி கொண்ட 'ஸ்டால்'கள் 50-ஐ வாடகைக்கு விடுதல்;

சைக்கிள் 'ஸ்டாண்டு' வைத்தல்;

மோட்டார் கார் 'ஸ்டாண்டு' வைத்தல்;

மாநாட்டு 'காம்பவுண்டு'க்குள் விளம்பரத் தட்டிகள் வைத்தல்;

ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் வியாபார விளம்பரம் செய்தல்.

16,000 சதுர அடி பந்தலில் சாப்பாட்டு (ஓட்டல்) ஏற்பாடு செய்தல்.

சோடா—கலர்—மோர்—இளநீர் விற்றல்.

மாநாடு பற்றிய குறிப்புகள் :

மாநாட்டுத் திடல் 1000'க்கு 2000' அளவுள்ள 'காம்பவுண்டு' கொண்டதாக இருக்கும்.

மே 17, 18, 19, 20 ஆகிய நான்கு நாட்கள்நடைபெறும்.

நாள்தோறும் காலை—மாலை மாநாட்டு நிகழ்ச்சிகள், இரவு நாடகங்கள் உண்டு;

குறைந்தது மூன்று லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர் பார்க்கப் படுகிறது;

திருச்சி 'ஜங்ஷனி'லிருந்து பந்தல் ஆறு பர்லாங் தொலைவில் அமைந்திருக்கிறது.

அ. பொ. தர்மலிங்கம்,
—தலைவர் வரவேற்புக் குழு.

அழகி அடிலேடு...

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

"அயோக்யனே! குடிகேடா! உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யும் சண்டாளா!" மைலோ சீறினர்!

"மைலோப் பிரபு; நீங்கள் கூறிய எதையும் நான் மறுக்கும் நிலையில் இல்லை." அல்லன் அமைதியாகப் பதிலளித்தார்.

"போர் வீரர்களே. இவன் யார் தெரியுமா? நமது அரசி தேடி அலையும் அல்லன் பிரபு இவன் தான்; உடனே கைது செய்யுங்கள்!" மைலோ உத்தர விட்டார்,

இந்த உத்தரவுக்குப் பின், மைலோவே நினைத்தாலும் கூட அல்லனைக் காப்பாற்ற முடியாத நிலை பிறந்து விட்டது!

தங்கள் கண் முன் நிற்பவர் அல்லன் பிரபு என்பதை அறிந்த போர் வீரர்கள் திடுக்கிட்டனர்.

அல்லனும் அடிலேடும் கைது செய்யப்பட்டு, ஆயுதம் தாங்கிய காவலாளிகள் இரு மருங்கிலும் வர, மைலோப் பிரபு வழி நடத்த கிளொவ் செஸ்டர் கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

நேற்று வரையில் நன்றி பாராட்டும் நண்பர்கள்—இன்று விரோதியும் கைதியும்! நேற்று வரை, அவருடைய இதய ராணி, அந்த எழில் ராணி! இன்று அவள் கைதி! அவருடைய உள்ளத்தை சிறைப் படுத்தி வைத்திருந்த அவள், இப்பொழுது அவருடைய சிறைக் கைதி!

பல ஆண்டுகளுக்கு முன் மாரிக்னி கிராமத்தில் அன்போடு உதவிய மைலோவின் கரங்கள் அல்லன் கண் முன் தோன்றும், சற்று நேரத்திற்கெல்லாம் சுருக்குக் கயிற்றைத் தன் கழுத்திலே மாட்டி இழுக்கும் அவருடைய கைகள் தோன்றும்.

அல்லன் அவசரமாகப் புறப்பட்டுச் சென்றதும், அவர் விடை பெற்றுக் கொண்ட முறைக்கும் நிகழ்ச்சிகளை வைத்துக் காரணங் கண்டுபிடித்து வேதனைப் பட்டுக் கொண்டே சென்றார் மைலோப் பிரபு!

வெளிறிய முகம், கலைந்த கூந்தல், அவமான த்தால் கவிழ்ந்த தலையோடு, நேற்று வரையில் அவளுடைய உதடுகள் உதிர்த்த ஒவ்வொரு சொல்லையும் ஆணையாக ஏற்று நடந்தவர்கள்; அவள் எப்போதாவது தங்களிடம் திருப்தி தெரிவிக்கும் வகையில் ஒரு புன்முறுவல் காட்ட மாட்டாளா என்று ஏங்கிக் கிடந்த போர் வீரர்கள் அவளைக் கண்காணிக்கும் காவலாளர்களாக வர, சோகமே உருவாய்ச் சென்று கொண்டிருந்தாள் பிரிட்டனின் பேரழகி அடிலேடு!

★

அல்லன் மீண்டும் கிளொவ்செஸ்டர் மாளிகையில் விருந்தாளியானார் மாளிகையின் மஞ்சத்திலே அல்ல- இருண்ட பாதாளச் சிறையில்! அளிக்கப்பட்ட உணவு எப்படிப் பட்டது என்பதை அறிய ஆசைப் படாமல், திருப்தியோடு உண்டார் அல்லன். அடிலேடு என்ன ஆனாள், எங்கே யிருக்கிறாள் என்ற ஏதும் அவர் அறியார். ஆனால் அவருக்கு அந்த இருண்ட அறையிலும் நண்பர்கள் இல்லாமல் இல்லை, அரை மணிக்கு ஒரு முறை சிறைக் காவலன் வந்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டுச் செல்வான்!

இரண்டு தினங்கள் இப்படிக் கழிந்தன. மரணத்துக்காகக் காத்திருந்து வேதனைப்படுவதை விட, சீக்கிரமே தண்டனை நிறைவேற்றப் பட்டால் நலம் என எண்ணினார். ஒவ்வொரு வினாடியும் கொலைகாரர்களின் வரவை எதிர்பார்த்த படியே, உறங்கி விட்டார்.

இரவு. யாரோ தன் பெயரைச் சொல்லி அழைப்பதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தார்

"உனக்காகத்தானப்பா காத்துக் கொண்டிருக்கிறேன். தூக்குக் கயிற்றுக்குத் தயார்," என்று வேதனை முடியப் போகிறது என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்.

"சத்தம் போடாதீர்கள்!"— என்ற ஒரு பெண் குரல். கையில் விளக்கொன்று ஏந்தி அழகி அடிலேடு நின்று கொண்டிருந்தாள்.

"எனக்குக் காவலாக இருந்த இரு பெண்களில் ஒருத்தி என் உயிர்த் தோழி. அவள் மற்றொருத்திக்குத் தூக்க மருந்து கலந்து தூங்க வைத்துவிட்டாள். நான் வந்துவிட்டேன், பொழுது விடிவதற்குள் இங்கிருந்து தப்பிப் போய் விடுங்கள்"

"வழியைக் காட்டு அடிலேடு, உடனே புறப்பட்டு விடுகிறேன்"

"இந்தப் பாதாளச் சிறைக்கு இரண்டு வழிகள் உண்டு ஒன்றின் வழியாகத்தான் நான் வந்தேன். இதோ. இன்னொன்று." என்று கூறி ஒரு கைப் பிடியைத் திருகினாள். கதவொன்று திறந்தது. உள்ளே நிறையப் படிகள் தென்பட்டன. "இதன் வழியாகப் போனால், கோட்டைக்கு வெளியே கொண்டுபோய் விட்டுவிடும். அதன் பிறகு தப்பிச் செல்லுவது, உங்கள் சாமர்த்தியம்... உடனே புறப்படுங்கள்... இன்று பொழுது புலருவதற்குள் உங்களைக் கொல்ல அரசியடமிருந்து உத்தரவு வந்து விடும்... ஹூம்... சீக்கிரம்"

"அழகோவியமான உன்னை, இந்த ஆபத்துக்களுக்கு மத்தியில் விட்டு நான் எப்படிப் போவேன், அடிலேடு; அப்படியே போனாலும் அரை மணிக்கொரு முறை இங்கே வந்து பார்க்கும் சிறைக் காவலன் நான் இல்லையென்பதை அறிந்ததும், என்னைத் தேடிப் பிடித்து விட மாட்டார்களா?"

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உடனே புறப்படுங்கள்"

அல்லன் போர்த்தியிருந்த அங்கியை மட்டும் வாங்கிக் கொண்டாள்.

அல்லன் அவளைத் தழுவி, உதடுகளில் முத்தமிட்டார். அவள் எதிர்பார்த்த இன்பம் பெற்று இன்புற்றாள்.

வெளியே கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. அல்லன், அவள் பிடியிலிருந்து விடுபட்டு, இரகசிய வழியின் மூலமாக வெளியேறினார்.

★

மறுநாள் காலை, மைலோப் பிரபு சிறைக்கு வந்தார்.

"அரசியின் கட்டளை நிறைவேற்றப் பட்டு விட்டதா?" சிறைக் காவலனைப் பார்த்து மைலோ கேட்டார்.

பதில் சொல்லாமல் இரத்தம் தோய்ந்த கத்தியைக் காட்டினான் காவலாளி!

"எப்படி இறந்தான் அந்தத் துரோகி?" மைலோவின் நாக்கு குளறியது.

"இதோ வாருங்கள்!" என்று சிறைக்குள் மைலோவை அழைத்துச் சென்றான் காவலாளி.

உள்ளே கொலையுண்ட உருவம் அங்கியைப் போர்த்தி படுத்திருந்த நிலையிலேயே இருந்தது. தனனுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத உதவியையும் துரோகத்தையும் செய்த அல்லன் பிரபுவின் முகத்தைப் பார்க்கும் ஆவலில், தன்னுடைய வாளால் மூடியிருந்த அங்கியை நகர்த்தினார்.

உயிர் மறைந்தாலும் அழகு குலையாத ஓவியமாக, அடிலேடு அமைதியான சவமாகக் கிடந்தாள்!

அல்லனைத் தப்புவித்த அடிலேடு காவலாளியை ஏமாற்றுவதக்காக அல்லன் போர்த்தியிருந்த அங்கியைப் போர்த்துக் கொண்டு படுத்து விட்டாள். அல்லன் மீது ஆருக் காதல் கொண்ட அவள், அவரைக் காப்பாற்றி, அவருக்கான தண்டனையையும் பெற்றுத் தானே தியாகத்தின் சின்னமானாள்.

பாதாளச் சிறைக்கான இரகசிய வழி தனக்கும், அடிலேடுக்குமே தெரியும் என்பதை உணர்ந்த மைலோ விஷயத்தை ஊகிக்க நேரமாகவில்லை.

★

பிறைவானம்......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

"செங்கண்ணா! வா, புறப்படுவோம்! மன்னர் மாண்டு கிடக்கும் காட்சியைக் கண்குளிர ரசிப்போம்!"

"அமைச்சரே! மன்னிக்க வேண்டும்...!"

"என்ன, மன்னிப்பா? நானல்லவா உனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்!..."

"இல்லை அமைச்சரே! நான் பொய் சொல்லி விட்டேன்...!"

"ஆ! பொய்யா? என்ன பொய்? சொல் செங்கண்ணா!"

"அரசரின் உணவில் விஷம் கலந்ததாகச் சொன்னேனே..."

"என்ன? அது பொய்யா? அப்படியானால் நீ...?"

"இல்லை அமைச்சரே! என் மனசாட்சி எனக்கு இடம் கொடுக்க வில்லை! ஆகவே விஷம் என் மடியிலேதான் இருக்கிறது!"

"அடப்பாவி! என் எண்ணக் கோட்டைக்கு வெடி வைத்து விட்டாயே!...ஆ, அங்கே என்ன? யார் அது?...என்ன? என்ன? அதோ, மன்னர் ஓடி வருகிறாரே! ஜாக்கிரதை செங்கண்ணா!"

"அமைச்சரே! அமைச்சரே! என் கண்மணி எங்கேயோ வெறிபிடித்தவனைப்போல் ஓடிவிட்டான்! தேடுங்கள்! தேடுங்கள்!"

"அப்படியா? என்ன இது? எனக்கொன்றும் புரியவில்லையே!"

"அமைச்சரே! அதென்ன, 'ரகசிய அறை, திறந்து கிடக்கிறது? ஐயையோ ஏன்? ஏன்?"

"புரியவில்லை மன்னவா! வாருங்கள் போகலாம்!"

★

அறை திறந்து கிடந்தது; உள்ளே இருந்த தங்கப் பெட்டி திறந்து கிடந்தது; அத்துடன் காலியாகவும் கிடந்தது!

அறையின் மூலையில்—கையையும் காலையும் உதைத்துக் கொண்டு மரண மூச்சு விட்டுக் கொண்டிருந்தான் இளவரசன்!

அவன் கையில் ஒரு நச்சுக் கோப்பை இருந்தது!

"ஐயோ!" என்று அலறினார் மன்னர்! ஆனால் செத்துக் கொண்டிருந்த சிப்பாய் மகன் வேந்தனின் மனசாட்சியோ இப்படிப் பேசியது: "அரச பீடத்திற்கு துரோகம் இழைத்தேன்! இதோ, மானம் காக்கும் மருந்து என் மானத்தைக் காத்து விட்டது!"

★

சமர் தொடுக்கும் முன்...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

திராவிட முன்னேற்றக் கழகத்தால் தென்னாடு புறக்கணிக்கப் படுகிறது—என்று கோஷம் எழுப்பிய நிலைமை மாறி, சமநீதி எங்கே — என்று அனந்தராம கிருஷ்ணர்களே அதட்டிக் கேட்க ஆரம்பித்திருக்கின்றனர்.

ஆமாம்; தென்னாடு கவனிக்கப்படவில்லை—என்னும் கோரிக்கையைப் பொறுத்த வரையில் வசிஷ்டர்கள் வாயிலிருந்தே, 'பிரம்மரிஷிப்பட்டம்' கிடைத்திருக்கிறது!

கேளாக் காதினரின் எதிரிலே கேள்விக்குறி பிறந்திருக்கிறது.

ஊமைகளாய் வாழ்ந்தோர் உருமுகிற புலியாக மாறி கர்ஜனை புரியக் கிளம்பி யிருக்கின்றனர்!

இந்த நிலைமை நீடித்தால் பதவி நிசமென்றிருப்போர் பஸ்பமாகித் தீருவர் என்ற முடிவுதான் ஏற்படும்.

எனவேதான் அறிவிக்கிறோம், வறண்டு கிடக்கும் தென்னகம் சார்பாக; அனந்த ராமகிருஷ்ணன் போன்றோரின் கன்னங்களிலே வழிந்தோடும் கண்ணீரின் சார்பாக;

சமர் தொடுக்கும் முன்
சமநீதி வழங்குவீர்—
என்று!

★

நம்பிக்கை...

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

எழுப்புவோரின் வேதனையைத் தீர்ப்பது எப்படி நம்பிக்கைத் துரோகமாகும்?

ஆலயத்து நவமணிகள் கூலிக்கு உடல் விற்கும் கோமளங்களின் மேனிக்கு அழகு சேர்ப்பதைவிட, அறிவுக் கோயில்கள் எழுப்புவது எப்படி நம்பிக்கைத் துரோகமாகும்?

சேல் விழிக்கும். செவ்விதழுக்கும் தத்தம செய்யப்படும்கோயில் சொத்துக்கள்: மருத்துவ விடுதிகளை திறந்து வைப்பதற்கு பயன் படுத்துவது எப்படி நம்பிக்கைத் துரோகமாகும்?

மித்திரனிடம் இதற்கெல்லாம் கண்ணியமான பதில் கிடைக்கும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

நல்லவைகள் அனைத்தும் நம்பிக்கை துரோகமென்றால் அந்த நம்பிக்கைத்துரோகம், வாழ்க! வெல்க!

பெரிய கோயில்களில் புழுங்கிக் கிடக்கும் செல்வத்தை பயன் படுத்த சர்க்காருக்கு 'அற்புதமான' ஒரு யோசனை கூறுகிறது மித்திரன்!

வெளவால்களின்; இருப்பிடமாக பாழடைந்திருக்கும் கோவில்களை; புனருத்தாரணம் செய்கின்ற திருப்பணிக்கு அந்த 'உபரி' சொத்துக்களைப் பயன்படுத்த வேண்டுமாம்!

பொதுக்காரியங்களுக்குப் பயன் படுத்தினால் — அது சொத்தெழுதி வைத்தவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாகுமாம்!

அறிவு வெள்ளத்திற்கு 'மித்திரன்' போன்ற ஆரிய ஏடுகள் இப்படி எத்தனை நாட்களுக்குத் தான் அணைபோட்டுக் கொண்டிருக்கப்போகின்றன, என்பதை— காலக்கண்ணாடியில் நாம் பார்க்காமலாபோய் விடுவோம்?

✻

பிறை வானம்

பிள்ளைகள் பகுதி...

மானம்காத்த 'மருந்து'!

"தம்பி, யாரப்பா நீ?"

"யாரா? கையிலே ஓலை; எழுதுகோல் — நடப்பதோ பள்ளிக்கூடம் நோக்கி! தெரியவில்லையா? நான் ஒரு மாணவன்!"

"அதில்லை தம்பி, உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி..."

"ஏன் பொய் சொல்லுகிறீர்கள்? என்னை நீங்கள் எங்குமே பார்த்திருக்க முடியாதே! ஏனென்ருல் நான் உங்களை எங்குமே பார்த்ததில்லையே!"

"அதிருக்கட்டும்; குறும்புக்கார சிறுவனே, உன் அப்பா யார்?"

"இதை முன்பே கேட்டிருக்கலாமே! என் அப்பா, சிப்பாய் **செங்கண்ணன்.** என்பெயர் **வேந்தன்!**"

"என்ன? செங்கண்ணன் மகனு நீ? சபாஷ்!...சபாஷ்! இனி வெற்றியேதான்!"

"என்னய்யா வெற்றி! அதிருக்கட்டும்; நீர் யார்? உம் பெயர் என்ன?"

"நானு? நான் இந்த நாட்டு **அமைச்சர்!**"

திடுக்கிட்டான் வேந்தன். "அமைச்சர்" என்று முணுமுணுத்தான். 'இவ்வளவு குறும்புத்தனமாக பேசிவிட்டோமே' என்று பயந்தான். திரும்பினான். ஆனல், எதிர்பாராத விதமாக வந்து, என்னென்னவோ கேட்ட அமைச்சர் அங்கே இல்லை. தூரத்தில் சென்றுகொண்டிருந்தது அவரது குதிரை!

★

"என்ன ஆயிற்று, அமைச்சரே?"

"பலனேதுமில்லை **மன்னவா!** திசை எட்டும் சென்ற நமது வீரர்கள் தோல்வியுடனேதான் திரும்புகிருர்கள், மீண்டும், மீண்டும்!"

"தோல்வி...! தோல்வி...! தோல்வி...! கிடைக்கவே மாட்டானு அமைச்சரே, என் மகன்?"

"அரசே! நான்கு ஆண்டுகளாக—இளவரசர் வேட்டைக்குப் போய் காணுதுபோன தினம் முதல் இன்று வரை நான்—நம் சிப்பாய்கள் — நம் நாட்டு மக்கள்—அத்தனை பேரும் தேடிக்கொண்டுதான் இருக்கிறோம்! நான் என்ன செய்ய?"

"ஐயோ! வேட்டைக்குப் போக வேண்டாம் என்று சொன்னேனே, கேட்டானு? எந்த விலங்கு என் அன்புத் தங்கத்தின் உயிரைக் குடித்ததோ! தேடி என்ன பலன்; நான் வாடிச் சாக வேண்டியது தான்!"

"மன்னவா! நான் மறுபடியும் வனந்திரம் பக்கம் சென்று பார்க்கலாம் என்று எண்ணுகிறேன்..."

"இதற்கு கேள்வி என்ன வேண்டியிருக்கிறது! தாராளமாகப் போய், என் மகனுடன் திரும்பி வாரும்... அவனில்லாமல் நீர் மட்டும் வந்தீர்; மறுநாளே உம் அமைச்சர் பதவி பறிபோகும், ஜாக்கிரதை!..."

"அரசே...?"

"பேசாதீர்! உடனே புறப்பட்டுச் செல்லும்!"

அமைச்சரைப் பார்க்காது புரண்டு படுத்துவிட்டார் மன்னர். படுக்கையோரத்திலே பத்திரமாக இருந்த தன் மகனின் உருவப் படத்தை எடுத்தார்; வெறிக்கப் பார்த்தார். "ஐயோ! மகனே!" என்று அலறினுர். பாவம், புத்திர சோகத்தால் அவரது குரல் கழகழத்தது. ஏக்கத்தால் வாடிக் கிடந்த அவரது உடல் குலுங்கியது. அவர் அழுதார்.

வஞ்சகப் புன்னகையுடன் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார் அமைச்சர்.

★

"செங்கண்ணு! சொன்னதெல்லாம் புரிந்ததா? பணமுடிப்பு பத்திரமா?"

"ஆமாம்; அமைச்சரே! ஆனல், எனக்கென்னவோ பயமாக..."

"பயம்! அட பைத்தியமே! உன் எதிர்காலத்தை—உன் மகனின் அரியணை வாசத்தை சற்று உருவகப் படுத்திப் பார்; அந்தப் பயம் பஞ்சாய்ப் பறந்து போகும்!"

"ஆபத்து எதுவும் வந்து விடாதே!..."

"ஆபத்தா? செங்கண்ணு! இனி உன் மகன்தான் இளவரசன்—உன் கழுத்துக்கு வெட்டறிவாள் வந்தாலும், அது பூமாலையாக மாறிவிடும்! தெரிகிறதா?"

"நான் போகட்டுமா?"

"போ, செங்கண்ணு! நாளை காலை உன் மகனுடன் வந்துவிடு! அவன் சிறுவன்; அதிலும் குறும்புக்காரன்! அவன் மனதிலே ஆழமாக விதை தூவி விடு! தெரிகிறதா?"

செங்கண்ணன் இடையிலே பணச்சுமை—உள்ளத்திலே இன்பச் சுமை இவற்ரேடு வெளியே சென்ருன். உள்ளத்திலே பேராசைப் புகை சூழ, ஒருமுறை இடியொலியென சிரித்து ஓய்ந்தார், அமைச்சர்!

"சிப்பாய் செங்கண்ணனின் மகன் நாட்டின் இளவரசன்! மரண முகப்புக்கு ஓடிக் கொண்டிருக்கும் மன்னனுக்கு விடுதலைப் பத்திரம்! அதன்பிறகு...? இளவரசன் பொம்மை மன்னன்! அதிகாரமனைத்தும் அமைச்சர் கையில்! நானே மன்னன்! நாடு என் காலடியில்! ஹா...ஹா!"

அமைச்சரின் வெறிச் சிரிப்பு அன்று இரவு முழுதும் விட்டுவிட்டு எழும்பிக் கொண்டிருந்தது.

★

"உண்மைதானு அப்பா நீங்கள் சொல்வதெல்லாம்?"

"மறுபடியும் **அப்பா** என்று அழைக்காதீர்கள் இளவரசே! நானும் மறைத்துவிடலாம் என்று தான் மனப்பால் குடித்தேன்! செல்வக் குமரர்—இந்த சீந்துவாரற்ற குடிசையிலே புரள விட்டேன்; ருசியற்ற உணவு படைத்து, உங்களுக்கு பெரும்துரோகமே செய்துவிட்டேன்! கேட்கிறதா மனசாட்சி; மன்னர்—ஐயோ, நான் எப்படிச் சொல்வேன், மகனை இழந்த அவரை சாவு 'வா, வா' என்று அழைக்கிறது! இளவரசே! இனியும் என்னல் பொறுக்கவே முடியாது!"

"அப்படியானுல்..."

"செங்கண்ணு என்று அழையுங்கள்! இனி நான் உங்கள் அப்பா இல்லை; நாளை காலை நீங்கள் அரண்மனை செல்லவேண்டும்! சிப்பாய் மகன் வேந்தனுக அல்ல; எதிர்கால வேந்தனுக; நாட்டின் இளவரசன் இன்மொழியாக!"

சிறுவன் வேந்தன் ஏதோ குழப்பத்துடன் இங்கு மங்கும் அலைந்தான்.

★

"மன்னரே! கிடைத்துவிட்டார் இளவரசர்!"

"என்ன? அமைச்சரே, என்ன சொல்லுகிறீர்? என்ன சொல்லுகிறீர்?"

"மகிழ்ச்சி பேச்சையே தடுக்கிறது மன்னவா! காடு மலைகளில் திரிந்தேன் — கண்டுபிடித்தேன் இந்த நாட்டின் செல்வத்தை! நான்கு ஆண்டுகள் நம்மைப் பிரிந்திருந்த இளவரசர் இன்மொழி, இதோ தங்கள் படுக்கையருகில் மன்னவா!"

"ஆ, என் அன்புச் செல்வமே! கிடைத்துவிட்டாயா? உன்னைக் காணுது அழுதேன்; அலறினேன்; துடித்தேபோனேன், என் கண்ணே! விலங்குக்குப் பலியானுயோ... என்னை சாவுக்குப் பலியாக்கி விடுவாயோ — என்று அஞ்சி அஞ்சி மாய்ந்தேன்!...அமைச்சரே! என் அருமந்த மகன் கிடைத்தான்; உமக்கு ஆயிரம் பொற் காசுகள் பரிசு!...ஆகாகா! இன்மொழி! கண்ணே!...என் அருகில் வா!"

"அப்பா!..."

சிறுவன் பாய்ந்தான். மன்னர் அவனை இறுகத்தழுவிக்கொண்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பின் அவர் முதல் முறையாக சிரித்தார்.

★

"அமைச்சரே! இதுதான் வசந்த மண்டபமா?... அரண்மனையைச் சுற்றிப் பார்க்க எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? நானும் வந்து ஒரு மாதமாகிவிட்டது. இன்று தான் அதற்கு நேரம் கிடைத்தது. வாருங்கள், இன்னும் செல்லுவோம்! உம்... இது என்ன இடம்?..."

"இதுதான் சுரங்க வழி!..."

"இது...?"

"உங்களுக்கு நினைவில்லையா, இது அரச குடும்பத்தினர் விளையாடும் கூடம்!..."

"ஓகோ!... ஆமாம்... இது என்ன அறை?

"வேண்டாம் இளவரசே! இதற்குள் நுழைய வேண்டாம்!"

"ஏன், கண்டிப்பாக செல்லத்தான் வேண்டும்... அல்லது உள்ளே என்ன இருக்கிறது என்றாவது சொல்லுங்கள்!"

"சொல்லுகிறேன், இது '**ரகசிய அறை**' என்று பெயர். உள்ளே பெரிய தங்கப் பெட்டி ஒன்று இருக்கிறது. அதனுள் "**மானம் காக்கும் மருந்து**" இருக்கிறதாம்!"

"அப்படி யென்றல்...?"

"அரச குடும்பத்தில் பிறந்தோர் யாராவது ஆட்சி பீடத்துக்கு துரோகம் இழைத்து விட்டால்... அது மானம் காக்குமாம்! அது என்ன என்பது எனக்குத் தெரியாது! ஆனல் பல தலைமுறைகளாக இந்த அறை திறக்கப் படாமலே கிடக்கிறது!"

"சரி, மேலே செல்லுவோம்!"

"இல்லை இளவரசே! அரசர் உங்களைக் காணுது தவிப்பார்! இன்னெரு நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே!"

அமைச்சர் இளவரசனை மன்னரின் அறையில் கொண்டு விட்டுத் திரும்பினுர். 'தொல்லை விட்டது' என்றுதான் அவர் வேக வேகமாக சென்று கொண்டிருந்தார். ஆனல் அவரைப் பின்தொடர்ந்து உருவமொன்று நகர்ந்து வந்ததை அவர் கண்டாரில்லை!

★

"செங்கண்ணு! எல்லாம் முடிந்ததா?"

"...முடிந்தது...!"

"ஏன், ஒரு மாதிரியாக இருக்கிருய்? அரசரின் உணவில் மட்டும் தானே கலந்தாய்?"

"இல்லை!..."

"என்ன, இல்லை? செங்கண்ணு?"

"ஆமாம்; ஆமா ஆமாம்! மன்னரின் உணவில் மட்டும்தான் கலந்தேன்!"

"அதுதானே பார்த்தேன்! பதட்டப் படாதே செங்கண்ணு! இப்போதுதான் இளவரசனை கொண்டு போய் விட்டு வந்தேன்! இன்னும் சிறிது நேரத்திலே... விஷ உணவு மன்னரை வேலை தீர்த்துவிடும்! நாளை, இரத்தக் கொதிப்பிலே மாண்டார் மன்னர் என்ற செய்தி, ஊருக்கு! ஆனல் உனக்கும் எனக்குமோ உன்னத வாழ்வு—இந்த நாடு—நலன் அனைத்தும்! நாளை உன் மகன்—போலி இளவரசன் அரியணையில்! அப்புறமென்ன?..."

"ஆ!... அமைச்சரே! அங்கென்ன சலசலப்பு? யாரோ ஓடுவதைப் போல் இருக்கிறதே!..."

"பிரமை செங்கண்ணு, பிரமை!"

★

"ஐயோ அரசே! உணவைச் சாப்பிட்டு விட்டீர்களா?"

"ஏன் பதறுகிருய், கண்ணே? இப்போதுதான் சாப்பிட்டேன்!"

"ஐயோ! சாப்பிட்டு விட்டீர்களா? சாவூருக்குப் புறப்பட்டு விட்டீர்களா? நான் துரோகம் செய்து விட்டேன்! மன்னவா, துரோகம் செய்து விட்டேன்!"

"இன்மொழி! இன்மொழி! எங்கே ஓடுகிருய்?... எங்கே ஓடுகிருய்?...என் மகனே...?"

★

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

எழுத்தாணி

> இந்த வாரம் பரிசு பெறும் தோழர்,
> (★) பெ. போத்தி
> 10. நடுத் தெருவு,
> பாலமேடு.

இளமணி; காட்பாடி.

(?) புதைக்கப்பட வேண்டியது எது? ஏன்?

பகுத்தறிவுக் கதிர் சாய்வதற்குச் சாத்திரக் குப்பைகளைப் புதைக்க வேண்டும்!

க. வெற்றி வேந்தன்; கோவை.

(?) சென்னையில் உஷ்ணம் எப்படி இருக்கிறது?

சட்ட சபையில் சில அமைச்சர்களின் பேச்சைக் கேட்கும்போது அதிகமாக இருப்பதாகத்தான் தெரிகிறது.

கே. தம்புசாமி; பொன்மலை.

(?) உலக அமைதியைக் காக்க வல்லவர் என்று சொல்லப்படும் நேருவால் உள் நாட்டு அமைதியை ஏன் காக்க முடியவில்லை?

ஊருக்கெல்லாம் சொல்லுமாம் பல்லி; கழனிப் பானையில விழுமாம் துள்ளி—என்கிற கதை தான்!

(★) பெ. போத்தி: பாலமேடு.

(?) அமைச்சர் சுப்பிரமணியம் எப்போது கண்ணீர் விடுவார்?

தமிழ் மக்களின் கண்ணீர் கூறிய வாளாக மாறும் போது!

எஸ். கந்தசாமி; மதுரை.

(?) இந்தியாவில் போலீசுக்கும் இராணுவத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

சாய்ந்து விழும் பிணங்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் இரண்டுக்கும் அதிக வித்தியாசமில்லை!

இன்பரசி; தேனீ.

(?) ஒரு ஆணைவிட ஒரு பெண் தன்னை அலங்கரித்துக் கொள்வதில் அதிக சிரத்தை காட்டுவதேன்?

உலகத்து ஜீவராசிகளிலேயே பெண்ணை விட ஆண் அழகு; அதனால்தான்! உதாரணம்: மயில்! மான்!

புலிக்கோன்; கா. புதூர்.

(?) உலகம் சுழன்று கொண்டேயிருப்பது ஏன்?

காலம் மாறிக் கொண்டேயிருக்கிறது என்பதை பழமையாளர்களுக்கு உணர்த்துவதற்காகத் தான்!

ப. சிவராமன்; நெல்லூர்.

(?) வருங்காலம் என்பது என்ன?

தற்கோலையிலிருந்து பலரைத் தப்ப வைத்திருக்கும் அற்புதமான சக்தி!

ச. நீலமேகம்; தூத்துக்குடி.

(?) சம்பிரதாயம் என்பது என்ன?

நம் மூதாதையர் செய்த தவறுகள்!

எல். சபாபதி; மேலகுப்பம்.

(?) காமராசரை தமிழ் நாட்டின் கதிரவன் என்கிறேன், நான்?

ஆனால் இந்தக் கதிரவன் மலை வாயில் விழுந்து விட்டால் பிறகு எழுந்திருக்கவே முடியாது நண்பரே!

தி. வி. சுந்தரம்; மதுரை.

(?) காக்கை உட்கார பனை விழுமா?

கற்—'பனை'யில் கட்டாயம்விழும்!

சௌந்தரம்; ஒரத்தநாடு.

(?) உலகத்தின் கூரை எது? காஷ்மீரமா?

ஆமாம்; அந்தக் கூரைதான் நேருப் பண்டிதரின் தலையில் இடித்துக் கொண்டிருக்கிறது.

★

கள்ளிகுளம்

நெல்லை மாவட்டம் தெற்கு கள்ளிகுளம் கிராமத்தில் 25-3-56 அன்று தோழர் நாஞ்சில் கி. மனோகரன் தலைமையில் கிளைக்கழகம் ஒன்று துவக்கப்பட்டது. தோழர் த. ம. சாமி செயலாளராகவும், இராசன் துணைச்செயலாளராகவும் சா. பிச்சை பொருளாளராகவும், கே. எஸ். முத்து மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். கி. மனோகரன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

தஞ்சை

7-4-56 சனி மாலை 6 மணிக்கு, தஞ்சை திலகர் திடலில், தோழர் ஆர். ஜேம்ஸ் அவர்கள் தலைமையில், தோழர்கள் மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசுவர்.

★

போந்தூர் (திருப்பெரும்புதூர்)

8-4-56 காலை 8 மணியளவில் திருப்பெரும்புதூரையடுத்த போந்தூரில் நடைபெறும் சுயமரியாதைத் திருமணத்தில் தோழியர் அருண்மொழி பி. ஓ. எல்; ஏ. கே. வில்வம், பூங்கோதை. ஆகியோர் பேசுவர்.

★

சாணுங்குப்பம் (ஆம்பூர்)

12-4-56 வியாழன் மாலை 6 மணிக்கு, தோழர் மு. கருணாநிதி பேசுவார்.

★

இரவு பள்ளி நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு

15-4-56 ஞாயிறு மாலை 5 மணியளவில் கோகலே மண்டபத்தில், தாங்கல்—திருவொற்றியூர் இரவுப்பள்ளி நிதிக்காக, அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

★

பரமக்குடி

26-4-56 இரவு 10 மணிக்கு, அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

★

இடப்பாடி

4-4-56 இரவு இடப்பாடி வேலாயுதம் படிப்பகக் கட்டிட நிதிக்காக, இடப்பாடி வள்ளுவர் கலாமன்றத்தால் தோழர் கே. ஜி. இராதாமணாளன் தீட்டிய 'அரக்கு மாளிகை' என்ற நாடகம் கவிஞர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. சேலம் மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் பா. இராமலிங்கம், மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினர் இரா. தாண்டவன் ஆகியோர் பங்கேற்றனர்.

வருந்துகிறோம்

சென்னை மாநில நிலவருமான அமைச்சர் திரு. மாணிக்கவேலரின் குமாரர் 28 வயது நிரம்பிய விசுவநாதன் அவர்கள், 25-3-56 அன்று படகு விபத்தில் தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டமை கேட்டு வருந்துகிறோம். நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேதி மாற்றம் கவனிக்கவும்!

50 பக்கங்கள் விலை 2 அணா
இலட்சியக் கனல் தெறிக்கும் இலக்கியப் பத்திரிகை!
'வாழ்க்கை கலை'
ஆசிரியர்: வஞ்சிக்கோவன்
தமிழ் வருடப் பிறப்பன்று வெளிவருகிறது.
நிர்வாகி,
58, சேரன்மாதேவி ரோடு,
திருநெல்வேலி.

அடுத்த வார "முரசொலி"
3-வது ஆண்டு
துவக்க இதழாக
புதிய அமைப்புகளுடன்
வெளிவரும்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6